உ

கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

சீராளன் அம்மானை யென்னும்

# சிறுத்தொண்டபத்தன்கதை.

இஃது

தி-திபாகரராய சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

அமரப்பேடு

இரத்தினமுதலியார் சகோதரர்

அ கிருஷ்ணசாமிமுதலியார்

அவர்களாற்றமது

கிருபாலக்ஷ்மிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ANMIYUR 11

MADRAS

1896.

உ

கடவுள் துணை.

# சிறுத்தொண்டபத்தன் கதை.

---

விநாயகர் தோத்திரம்.

முன்னின்றுவரந்தரும் பிள்ளையாரேகந்தர்
முக்கணனார்பெற்றெடுத்த முதலோனே
சென்றுதிசைவென்றலரும பிள்ளையாரேகந்தர்
தீம்பொன்றுகாரரபல் காததனிப்பாய்
கொம்பனேஉமையவாமும சிறியோனேயின்னம்
குஞ்சரமுகுந்தனின மூத்தோனே
நப்பியேகாரணன் மருகோனேயின்னம்
நந்துமையாள்பெற்றெடுத்த ஞானகுமார
தமபிபேவுலகேழும் வலமாய்வரச்சொன்னேன்
தந்தைதாயைவலமவந்த கதிரோனே
ஈசன்மகனே பிள்ளையாரேகந்தர்
யீரேழுலகுக் கொருதனிமுதலே
மாயனமருகோனே பிள்ளையாரேகந்தா
வளருங்குழந்தை குருபரனையா

சரஸ்வதிதோத்திரம்.

வாணிகலைவாணி சரஸ்வதியேயெங்கள்
மறையவனாரிட தேவியம்மா
நான்முகனாருடைய நாவிலேநின்றுதமிழ்
நான்மறையோதிவிக்கும தேன்மொழியே
சிறுதொண்டனார்தமிழ் யானுரைத்ததினம்
சிந்தையில்வந்துதித்து தெளிவுசொல்வாய்
கன்னகரிப்பாலனும் கவியாணைச்சோழனும
அவரிடவம்மிசங்கள் விகவாழ்க
தென்னகரிப்பாலனும் திருநீற்றுச்சோழனும
செங்கோல்முறைமை கட்டியரசாண்டார்
ஆறிலொன்றாகவே வாரங்கொண்டானேசோழன்
அன்பானராச்சியபாரந் தன்னையாண்டான
ஏழிலொன்றாகவே வாரங்கொண்டான்சோழனை
எண்ணிருச்சியபாரந் தன்னையாண்டான

கதையின்வரலாறு.

மன்னவனோரஞ்சி பாண்டவரைவரில்
வணங்காமுடிபெற்ற கருணராஜன்
காசிநிதனிலேபோய் பிறந்தகர்ணன்
கையினால்சிவலிங்கப் பூசைசெய்தார்
திருச்செங்காட்டிலே சின்னமெடுத்தல்லோ
சிறுத்தொண்டபத்தனென்று பெயரெடுத்தான்

சிவபூசை அரிபூசை குருபூசைமறவாமல்
திருவெண்காடுநங்கையுடன்வாழ்ந்திருந்தான்
சிவனாவரமளித்த கட்டளைபடியாக
சீராளதேவனையும் பெத்தெடுத்தார
சீராளதேவனும பிறந்தேழுவயதாகி
திருப்பள்ளிக்காளாகி தான்படிப்பான்
இப்படியிருக்கின்ற நாளையில்வெண்காட்டா
ளேதுசொல்வாள்தன் புருஷன்முகம்நோக்கி
நீதேடினதிரவியம் வேணதுண்டுபத்தா
திருப்பாரங்களுக்கன்னம்நீரிடுங்காண்
பொன்னைப்பொருளைததான் தின்னலாமோபத்தா
அன்னங்கொடுங்காணும் அன்பனாரே
காசைபணத்தைதான் தின்னலாமோபத்தா
கடைத்தெருவிலன்னக்கொடி கட்டலாமென்றாள்
அன்னக்கொடி கட்டுமென்றால் வெண்காட்டுநங்கையே
அத்தவுறுதிகள் வேணுமபெண்ணே
உன்மனமானார்போல் யென மனமானாலே
உறுதிதவமவிலக்கும பெண்ணேயென்றான்
என்மனமானாற்போல் உன்மனமானாலே
யெள்ளளவுதவங்களுங்குறையாது
நானுண்டிக்கிடச்சொனனால்நீதாதனுக்கிட்டாலே
அதனால்தவங்கள் புண்ணியமவருவதுண்டோ
அப்படி தவறுவேனோ அடியாள்நீர்சொன்னசொல்
ஆதிசிவனறியச்சொல்லுகிறேன்
அருமைபிள்ளைபொருவன்சீராளனார்தன்னை
அதிகதவவுறுதி கொள்ளுமென்றார்
அப்படியாகுதென்று சிறுத்தொண்டபத்தனார்
அன்னக்கொடியெடுத்து கட்டுவாராம்
வருவார்க்கும்போவார்க்கும்அமுதுபடைப்பேனென்று
தலைவாசலன்னக்கொடி கட்டுவானும்
நின்ற நின்றசங்கமர்க்கு அமுதுபடைப்பேனென்று
நிலைபாகஅன்னக்கொடி கட்டுவானும
சென்றசென்றசங்கமதக்கு அமுதுப்டைப்பேனென்று
தெருவிலேஅன்னக் கொடிகட்டுவானே
அன்னக்கொடிநின்றங்கே வாவென்றழைக்குமாம
அழகியசிறுத்தொண்டர்வாசலிலே
அன்னக்கொடி விருதும ஆருட்சிபொன்மணியும்
அசையுதவனுடையவாசலிலே
ஆயிரமபேர்க்கன்னம் சரியாய்நிறைந்தபின்
ஆருட்சிமணியொன்று அடிபடுமாம்
ஐயாயிரம்பேர்க்கன்னம் சரியாய்நிறைந்தாலே

அஞ்சுகொத்து நவமணிகளிடடுமாம
ஆயிரம்பேர்க்கொருவர் குறைந்தேயுண்டானு
லசையாமலாராட்சிபணியிருக்கும்
ஆயிரம்பேர்களுண்டார்யிலையில் - ரிகலத்தில
அவர்களிருவரும் போசித்திடுவார
ஆயிரம்பேரிலே ஒருவர்குறைந்தாலே
அருந்தாரிருவர்கள சலபானம்
விரதங்கள் குறையாமல் சிறுத்தொண்டபத்தர்
வெண்காட்டுநங்கையுடன் வாழ்ந்திருந்தான்
இப்படியிருக்கிற நாளையிலீஸ்பரன்
பேதுசொல்வார் உமையவள்தன்னுடனே
எனக்குநிகராரோ இல்லையென்றுதொண்டன்
யெடுத்தானே அன்னக்கொடி விருதுமணி
அன்னக்கொடிவிருதை யறுப்போமோபெண்ணே
அவனுட அன்புபுத்தி சோதிப்போமே
அன்னக்கொடிவிருதை யறுப்போமோசுவாமி
அவனுட அன்புபுத்தி சோதியென்றுன
பத்தனைப்போலவடி பார்வதியே உமையே
சித்தனைப்போலவடி சிவதெளிவே
பத்தராய்ப்போனாலும் தம்பிரானே உமை
டவரென்றறியார்கள் மானிடர்கள
சித்தராய்ப்போனாலும் தம்பிரானே சிவனே
செச்சேறவெட்டார்கள் மானிடர்
மண்ணிலுள்ளமனிதர்கள் மகிழும்படியாக
வைரவர்வேஷத்தைக் கொள்ளுமென்றாள்
கண்டவர்களுனைப்பார்த்து மகிழும்படியாக
சங்கமவேஷத்தைக் கொள்ளுமென்றாள்
உமையவள்சொல்புத்தி நிசமென்றுமெண்ணியே
உத்திராட்சத்தாவடந்தரிப்பாராம
கொங்குகுருந்தமர்ச் சாத்துவாராமையா
குவளைப்பூவன்னிமலை யன்னிப்பாராம்
வெள்ளையுடனே நல்லநாணலும்புன்னீரும்
விதவிதபுஷ்பமாகத் தரிப்பாராம்
விரித்தசடையும் வெண்பாரிகள்வொளியும்
மேலேக்கும் பேறிவிட்டவிற்படுமே
ஆதித்தமுகமும் அதிமுகதுகாவடமும்
அலங்காரத்துடனே குண்டலமும்
வடிவாகவொருவனேறே சிறுத்தொண்டதேவனை
வண்ணமைகள் சோதிக்கவேண்டுமென்று
கலியுகந்திசைநோக்கி நடக்குமளவினில்
காலிலேயிட்டதொரு பொன்சிலம்பாம்

காலிலேயிட்டதொரு பொன்சிலம்பாமையர்
        மார்பிலேபூண்டதொரு சங்கநாதம்
காலில்சலிலென்று கடப்பாரமையர்
        கால்பிணிநால்பிணி வராமலே
காணச்சிவன்பாதம வேணியில்பார்வதி
        காவேரியார்வந்து விளங்குவாளாம்
கொங்குகடலிலே மழைபொழியவெல்லம்
        குமரிகாவேரி வெள்ளமபெருக
முல்லைவனத்துகளைக் கொள்ளைகொண்டுவெள்ளம்
        மூங்கிலவனத்துகளை முடிக்கடித்து
சந்தனமரத்தை தறித்தடுக்கிவெள்ளம்
        தாருள்ளவாழை நடத்திக்கொண்டு
பஞ்சாலிஞ்சியனமுள்ள மல்லிகையுடன்
        மாதளங்காய்ஊமத்தைமிதந்திடுமாம்
மோட்டிலேஉள்ளதொரு மோவிபுலிமுதலை
        முழிகள்சிவச்சகொங்கை மிதந்திடுமாம்
காட்டிலேவாழுகின்ற கரடிபுலிசெந்நாய்
        கண்கள்சிவக்ககொங்கை மிதந்திடுமாம்
கல்லுருகிவெள்ளியலை யுருகிக்கைலாய
        பர்வதத்தைவலம்வந்து சூழ்ந்திடுமாம்
அதுதனையுமவருதல்லோ ஐயருடன்பாதத்தை
        புஷ்பமாகநின்றங்கே பணிந்திடுமாம
வந்ததொருகாவேரியை வைகயாலமர்த்தியே
        தயபிரான்கனபட்டு யேறுவாளும்
அப்பன்சிறுத்தொண்ட னைமனமறியசுவாமி
        யாருமில்லையேசிவ னொருவனாற்
அக்கோரமசிவனடி யார்களைக்காணமல்
        அவருல்டதேவியுடனேதுசொல்வான்
இக்கோரத்திருப்பெருக் காயிரப்பேர்க்கன்னம்
        யிட்டிடுவோம்பெண்ணே நாமென்னசெய்வோம்
இன்றைக்கு ஒருவருமா இல்லாமற்போச்சுது
        யிப்பொழுதேதேடிக்கொண்டு நான்வருவேன்
வந்ததொருசங்கமருக் கன்னங்கொடுத்துபெண்ணே
        மலர்ப்பதம்பணிந்தே தொழுதிடவும்
திருப்பெருவடக்களைத தேடப்போனனப்பன்
        சிவனொருமந்தவேளை வருகலுற்றார்
திருவடிக்கமலமுநு திருச்சிலம்போசையும
        கைகட்லில்சூலமும டமரகமும்
ஆடியடமரகம சாடிப்பாராமையர்
        அண்டரண்டபகிரண்டமதிர்த்திடவே
திருக்கையில் டமரகம் சாடிப்பாராமையர்

தெய்வலோகம் புவனங்களிருக்கிடவே
தெருவிலேவிளையாடும் சிறுபிள்ளைகள் தம்பி
சிறுத்தொண்டன்மடமெது சொல்லுமென்றார்
அறியார்க்கறியவேதான் நம்பிரானே சிவனே
அதோவலலேதோணுதுபார் அன்னக்கொடி
தெரியார்க்குதெரியவேதான தம்பிரானே சிவனே
தெருவிலேஅன்னக்கொடி தோணுதடா
சிறுத்தொண்டனாமனை தெருவாசல்வந்துநின்று
செயகண்டிவாத்தியத்தை தசைத்தார்
அதுகேட்டாளம்மை வெண்காட்டுநங்கையுடன்
சந்தனநங்கையும் தானுமாக
சுத்திவந்தாளம்மை சூழவலம்வந்து
சீர்பாதமேபோற்றியென்று தாம்பணிந்தாள்
யந்தபொழுதிலே தெண்டனிட்டாளம்மை
வருந்தியேமடத்தில் அமுதஞ்சொன்னாள்
கண்டபொழுதிலே தெண்டனிட்டாளம்மை
கடுகியேமடத்தில அமுதஞ்சொன்னாள்
உருக்கியநெய்களுடன் பொறிக்கறியாமினும்
வுளுந்துவடைகளுடன் மாங்கனியும்
கொத்துமாங்கனி பலாக்கனியுடனேயமுது
கொள்ளவேமடத்துக்குவாருமையா
வந்துபணிந்தொரு வெண்காட்டுநங்கையை
வாயாறவாழ்த்தியே சேர்த்தெடுத்தார்
மங்கிலியம்வர்த்திப்பாய் மாதாவேதாயே
மகதேவரருள்பாதமேபோற்றிவாழ்வாய்
சந்தானமவர்த்திப்பாய் மாதாவேதாயே
சாகாதேஆண்பிள்ளையைப் பெற்றுவாழ்வாய்
நீயுங்கணவனும் உன்னுடையசுற்றமும்
உமையருளபாதம் பெற்றுவாழ்வாய்
நீதானிங்கேவந்து சமயிட்டாயேதாயே
உன்கணவனெங்கேயென்று கேட்பாராம்
இறப்பாபரப்பா விசாரியாரை
யிட்டுவரப்போறு ரடியாமகளே
ஆளனில்லாமனையி லுண்ணேனம்மாதாயே
அவ்விடத்திலன்னமிட்டால் கொள்ளேனென்றார்
புருஷனில்லாமனையி லுண்ணேனம்மாதாயே
பொற்கலத்திலன்னமிட்டால் கொள்ளேனென்றார்
தருக்கியேபொன்னிலே தங்கத்தட்டிதந்தாலும்
தலைவனில்லாமனைதனி லுண்ணேனென்றார்
உருக்கியபொன்னிலே ஒருபடிதந்தாலும்
உளவனில்லாமனைதனி லுண்ணேனென்றார்

எங்கேயெழுந்தருளி யிருப்பீரேஜயா
அங்கேவரச்சொல்லுகிறேனுமமடியாரை
கோவில்மதிலோரம் சார்ந்திருப்பேனமமா
கோலமானதிருஆத்தி அடியிலிருப்பேன
அப்படி நல்லதென்று வெண்காட்டுநங்கைக்
கருளியேபதிருஆத்தி அடியில்வந்தார்
திருவாத்திமரத்தை தேடிவந்தாரையா
சிறுபுலியாசனத்தை போட்டமர்ந்தார
ஆத்திமரத்தடியில் வீற்றபொழுதிலே
காற்றுமழைகளுமம உண்டாச்சி
காற்றுமழைகளும் கடுங்காற்றுமின்ன
கடுகியேமங்கலங்கிச் சொறிடவே
இலைகள்கருகிவிடா திருவையாத்திமரம
இலைதழைத்தேமரம நீழலிடுமாம்
பூசாதேநின்றதொரு கயிலாவையாத்திமரம்
பூத்தல்லோபுஷ்பமாய்ச் சொரிந்திடுமாம்
காயாதநின்றதொரு கருவையாத்திமரம்
காய்த்துகனிபழமாய்ச் சொரிந்திடுமாம்
ஒருபக்கமசெண்பகம பூத்திடுமாம்மரம்
ஒருபக்கமபாதிரிபூத்திடுமாம்
ஒருபக்கம்மல்லிகைப்பூத்திடுமாம்மரம
ஒருபக்கம இருவாட்சி பூத்திடுதாம்
அப்படிகளொத்ததொரு ஆத்திமரத்தண்டை
அய்யாபரமசிவன் வீற்றிருந்தார்
தேடப்போனது சிறுத்தொண்டதேவனையான்
திகைத்துமயங்கியே மடத்தில்வந்தான்
கத்திதாராய்பெண்ணே நீ கத்திதாராயடியென்
கழுத்தையறித்துகொள்ள கத்திதாராய்
ஒத்தியூர்ச்சிற்றம்பலம் ஓடினேன்தேடினேன்
அங்கேஒருசங்கமரைக் கண்டதில்லை
குற்றாலந்துறனுடு வோடினேன்தேடினேன்
குருபரனவரைக் கண்டதில்லை
வண்ணாரப்பெண்ணுக்காக வணயபுகுந்தாரையர்
அண்ணாமலைப் பழனி தேடிவந்தேன்
அண்ணாமலைப் பழனி ஓடினேன்தேடினேன்
அங்கேயொரு சங்கமரைகண்டதில்லை
கழுக்கள்வலமாய்வந்து நயினாரைப்பூசிக்கும்
திருக்கழுக்குன்றபதி தேடிவந்தேன்
திருக்குன்றபதியே ஓடினேன்தேடினேன்
சிவபூசைசெயவாரைக் கண்டதில்லை
குளங்கள் குளக்கரைகள் ஓடினேன்தேடினேன்

குருபரனைவரைக்கண்டதில்லை
மடங்கள்மடப்பள்ளிகள் ஓடினேன்தேடினேன்
குருமகதேவ ரானவரைக்கண்டதில்லை
ஆயிரஞ்சங்கமருக் கமுதளிப்போமபெண்ணே
அவர்கள்வைத்தபரிகலத்தை யடியேன்கொள்வேன்
இன்றைக்கொருசங்கமர் வாராமற்போனது
ஈஸ்வரனார்தமமுடைய செயலிதுவோ
விரதங்கள்முடியாமல் போச்சுதேயாமானல்
விடுவேனேஎன்னுடைய வுயிரையென்றார்
க்கதிதாராய்பெண்ணேநீ கத்திதாராய் பெண்ணேநீ
கழுக்கையறுத்துக்கொள்ள கத்திதாராய்
கத்தியேகேழ்க்கின்றீ ரன்பனேரேபத்தா
கருமபலன்கள்தன்னை தேடுகிறீர்
மஞ்சாறுபெருகிய பொய்கையிலேபெண்ணே
மடுவிலேயடைந்த செந்தாமரைபோல்
துஞ்சாமலமுகங் குளிர்ந்திருக்தாதே பெண்ணே
வந்தாருண்டோ திருப்போர்மடங்கனிலே
வந்தாருண்டன்பனே வந்தாருண்டொருவா
மகாதேவர்தன்னைப்போலே வந்தாருண்டு
வந்தவொருசங்கமரை யெங்கையோ போகவிட்டு
வாழ்ந்தவலக்காரமோ பேசுகிறாய்
என்தாரமென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
தூரதார்மானதை நானறியேன்
மனையாளென்றல்லவோ நானிருந்தேன்பெண்ணே
மாபாவியானதை நானறியேன்
வீட்டிலாளென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
வேசியானதை நானறியேன
சிவனடியாளென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
சிவதுரோகியானதை நானறியேன்.
உன்தாரமென்பதுக்கு வொருகுறைவுமில்லை
உத்தமரேயென்றுசொல்லக் கேளுமென்றார்
பள்ளியிற்படிக்கிற சிறுவனென கணவனே
பத்தாவேயொருவார்த்தை சொல்லுகிறேன்
வந்தார்வந்தாரொரு சங்கமனார்வந்தார்
கதேவர்தன்னைப்போலே வந்தாரையா
அவ்வொருவர்க்கமுது கொடுப்போமேயானல்
ஒருகோடிசங்கமர்க்கு ஒவ்வுமென்றாள்
அவரேநம்மிடவீட்டி லமுதுண்பாராமானல்
ஆயிரமசங்கமர்க்கு ஒவ்வுமென்றாள்
அவரைக்கண்டபொழுதேதண்டனிட்டேனடியேன்
கடுகியேமடத்திலே யமுதுசொன்னேன்

வந்தபொழுதிலே தெண்டனிட்டேடியேன்
வருந்தியமடத்திலே யமுதசொன்னேன்
ஆளனில்லாமடந்தனி லுண்கேனென்றுரையா
அவ்விடத்திலன்னமிட்டால் கொள்வோமென்றார்
கோவில்மதிலோரஞ் சேர்ந்திருப்பேனென்றார்
கோலமான திருவாத்தியடிதனிலே
ஆத்திமரத்தடியில் வீற்றிருப்பேனென்றார்
அன்பர்வந்தாலங்கே வரவேசொன்னார்
காலத்தாலுலேகட்டி சமையடிபெண்ணேநீ
கடுகியேசங்கமரைக் கொண்டுவாரேனே

சிறுத்தொண்டபத்தன் சங்கம்வேஷம்பூண்ட
சுவாமியைத்தேடப்போகிறது

ஒருசுற்றுவேஷ்டியும தரிப்பாராமன்பன்
ஒருப்சம்பூணூலு போடுவாராம்
திருவெண்ணீற்றுச்செழுத்தை யோதுவாரும்தொண்டன்
திருக்குன்றைமாலையொன்று போடுவாராம்
திருக்கொன்றைமாலையொன்று மாரிலசைந்தாட
திருவாத்திசைநோக்கி நடப்பாராம்
திருவாத்திமரத்தனில் தேடிவந்துபத்தன்
கொண்டநமஸ்காரம் செய்குவானும்
ஆதியேஉன்பாதம் போற்றிபோற்றிசிவனே
அம்பலவாணனே போற்றிஐயா
சோதியேஉன்பாதமபோற்றிபோற்றிசிவனே
சிதம்பரதேவனேபோற்றிஐயா
திருக்கொன்றைமாலையொன்று மார்பிலசைந்தாட
திருவாத்திதிசைநோக்கி நடப்பாராம்
திருவாத்திமரந்தன்னை தேடிவந்துபத்தன்
தெண்டநமஸ்காரஞ் செய்குவானும்

சிவவேடம்பூண்ட பண்டாரத்தைசிறுத்தொண்ட
பத்தன்காணுதல்

ஆதியேஉன்பாதம் போற்றிபோற்றிசிவனே
அமபலவாணனே போற்றிஐயா
சோதியேஉன்பாதம் போற்றிபோற்றிசிவனே
சிதம்பரதேவனே போற்றிஐயா
ஆதியேஅமுதுண்ண வாருமையாசிவனே
அரனேஅமுதுண்ண எழுந்தருளும்
சோதியேஅமுதுண்ண எழுந்தருளும்தேவா
சிதம்பரதேவனே வாருமையா
போற்றிடுகிறசத்தந் தனைக்கேட்டு
புலிமுகவாணனார் முகம்பார்த்தா

அழுதகள்ளர்தொழுதகள்ளா எழுந்திருபத்தா
ஆச்சாரக்கள்ளனுமோ எழுந்திருடா
கும்பிடுங்கள்ளா நீ யெழுந்திருடாபத்தா
குழைத்திடுங்கள்ளா நீ யெழுந்திரடா
அன்புள்ளகள்ளா நீ யெழுந்திரும்பத்தா
ஆசாரமுள்ளவனே யெழுந்திரடா
உன்னைத்தானுசிறுத்தொண்டனென்பது
உலகமெல்லாம்பெரியவார்த்தையானதும்
ஆமாங்காணுமாங்காண் தம்பிரானேசிவனே
அகத்துகருமடப்படி யடியேனென்றான்
அமுதுக்கழைக்கவந்த சிறுத்தொண்டபத்தர்நீ
அகத்திலென்னகறி சமைத்தாயேடா
விரும்பியழைக்கிறையே சிறுத்தொண்டபத்தாநீ
வீட்டிலென்னகறிசமைத்தாயோடா
மண்டலத்தில்மனிதர்கள் வழங்குங்கறிவகை
மடத்தில்சமைத்திருக்கும் சாமியென்றான்
இசையானகறிவகை யிவ்வுலகிலுண்டானோர்
யேதோபலவகை பொசித்திடுவார்
உந்தன்மடந்தனில் சமைக்குங்கறிவகை
உறுதியாகநீவான் சொல்லுமென்றார்
ஆனாலுரைக்கிறேன் தம்பிரானேசிவனே
அறியவேகறிவகை சொல்லுகிறேன்
சிறுத்தொண்டபத்தன் சிவவேடம்பூண்டபண்டாரத்துக்கு
பதார்த்தவகைசொல்லல்
பூசணிக்காய்கறிசமைத் திருக்குமடத்தில்
புடலங்காய்கறிவகை சமைத்திருக்கும்
பாவற்காய்கறி சமைத்திருக்குஞ்சுவாமி
பயத்தங்காய்பொரிக்கறி செய்திருக்கும்
வாழைக்காய்கறி சமைத்திருக்குஞ்சாமி
வழுதலங்காய்பச்சடி செய்திருக்கும்
கீர்க்காய்கறிவகை சமைத்திருக்குஞ்சுவாமி
அவட்டல்செய்தவரைக்காய் பொரித்திருக்கும்
இத்தனைகறிவகைகள் எந்தன்மடத்திலே
இப்போதுசமைத்திருக்கும்வருமையா
போதும்போதும்சிறுத்தொண்டா சொன்னகறிவகை
பொல்லாத வகைகளோ சொன்னாயோடா
பூசணிக்காயாவதும் அன்பனும்மக்களும
அய்யருடனிருந்ததொப்பை யல்லவோடா
புடலங்காயாவது அன்பர்னோர்கேளும்
அய்யருடன்பேராளசடையல்லவோடா
முருங்கக்காயாவதும் சிறுத்தொண்டபத்தா
அய்யருடன்வுச்சிசடை தானல்லவோடா

பாவற்காயானதும் அன்பனுரேகேளும்
அய்யருடருத்திராட்ச மாலையல்லடா
அவரக்காய்கரிபொரிததே யென்றுயன்பா
அய்யருடபத்துவிரல் நகமல்லவோ
சுரைக்காயகூட்டமுது செய்தேனென்றுப்பததா
அய்யருடகமண்டலம் தானல்லவோ
பீர்க்கங்காயாவதும் அன்பனுரேகேளு
அயயருடவிபூதிபை தானல்லவோ
கத்திரிக்காயாவதும் அன்பனுரேகேளும்
அய்யருடதிருப்பூசைமணி தானல்லவோ
வாழைக்காயாவதும் அன்பனுரேகேளும
அய்யருடதிரிகெற்றி சதைக்தாயோடா
நண்ணுச்சுநண்ணுச்சு சிறுத்தொண்டபததா
நல்லவிதக்கரிகள் சொன்னுயோடா
என்னையறுத்துபத்தா யெனக்குமேயிட்டுநீ
யென்னையுங்கொல்லவகைபார்த்தாயோடா
இத்தனைகரிவகைக சமைகதுகல்லவேதான்
யெத்தனைப்ரிதேசியைக் கொனருயோட
தன்னையறுத்துத் தவமுனாரதமகததுனேரா,
தானருந்தரிந்த கறிவகைகள்
ஈதெல்லாம்வேண்டாமத் போனுலுமையரோ
யின்னமொருவிதங்களைச சொல்லுமென்றுர்
ஆட்டிலொருகோடிநான் பொரிப்பேன்சிவனே
மாட்டிலொருகோடி நான்பொரிப்பேன்
பாலுண்டுபழமுண்டு பண்டாரமேசிவமே
பசியாறிப்போகவல்லோ வாருமென்றேன்
ஆட்டைத்தான்கொல்லுகிற அரும்பர்விமனையிலே
அறியாதேயமுதுண்ண வந்தேனென்றுர்
மாட்டைதான்கொலலுகிற மாபாவியிடத்திலே
மத்தியானவிருந்துக்கு வாறேனென்றுர்
ஆட்டையுங்கொல்வதில்லை மாட்டையுங்கொல்வதிலலை
ஆவுமபசுக்களை நானறியேன்
புல்லைத்தின்னுமது நீரைக்குடித்தல்லோ
போதஸ்தனங்கள் தன்னைகொண்டாடும்
அல்லல்படாமலே மேய்ந்துவந்தொடுங்கும்
ஆவும்பசுக்களைநானறியேன்
காட்டுமாங்கனிகளும் தோத்துமாங்கனிகளும்
சர்க்கரைகற்கண்டு பிலாக்கனியும
பாலுண்டுபழமுண்டு தம்பிரானேசிவமே
பசியாறிப்போகவேல்லோ வாருமையா

வாழும்பதியெனக்கு வேண்டாமோடாபத்தா
பந்துசெனமுண்டோ பாதாவிவ்வூரிலே
இச்சையானகரிவகை பிதந்தனுசேயினனம்
எடுத்துரைத்தால்கொண்டுவந்து தருவேனென்றான்
சிவவேடம்பூண்ட பரமசிவன் சிறுத்தொண்டபத்தனை

பிள்ளைகறிகேட்பது

உனக்குநமக்கும் நலம்பெறவேணுமென்றால்
இளமானின்தன்கறி வேணுமென்றார்
அருளைச்சொன்னபடி தப்பாமோபத்தா
அறிவுடனேவாம்நீ கேட்பாயோடா
ஒருதாய்க்கொருபிள்ளையாகவேணுமடபத்தா
உண்மையானபாலகனாய் வேணுமடா
தாய்க்குத்தலைமகனாய் வேணுமடாபத்தா
தாசெபெத்தபாலகனாய் வேணுமடா
வயதிலே அஞ்சாக வேணுமடாபத்தா
வம்மிஷபழியோனாய் வேணுமடா
குடிக்கொருவனாக வேணுமடாபத்தா
கிளைக்குமொருவனாய் வேண்டியடா
கல்வியிலே நாலுவேதம் ஓதவேண்டும்பத்தா
சீராளதேவனாக வேண்டுமடா
இப்படிக்கொத்தபிள்ளையிருந்ததே உண்டானால்
இட்சணமுன்னை வருவேனென்றார்
தம்பிரான்சொல்லைக்கேட்டு சிறுத்தொண்டபத்தன்
தவசகுறைவராயேலே யேதுசொல்வான்
அப்படிக்கொத்தபிள்ளை அடியேன்தருகிறேனை
அராஜேசெய்யும்வகை சொல்லுமென்றார்
உபயிதமாகவே உடனேபோய் விழித்துசென்று
உண்ணும்வகையாய் பிள்ளையழைத்துவந்து
மஞ்சனீர்சாலையிலே வசந்தநீர்பாலித்து
மாதாமடியில்வைத்து இலாதமிட்டு
பொட்டிட்டுமையிட்டு தாயார்கரத்தாலே
பேரானதொட்டிலிலே தானவளர்த்தி
தாலாட்டிபிள்ளைதன்னை தாயார்கரத்தாலே
தங்கப்பலகையினில் தானமர்த்தி
தாயாருங்கையுங்காலும் பிடிக்கவேண்டும்பத்தா
பெற்றதகப்பனார் கழுத்தைப்பறுக்கவேணும்
கழுத்தைப்பறுத்து கழன்றஉதிரத்தை
கரிசட்டிதனில்வேறே வாங்கவேணும்
உரலிலேதலைபோட்டு துவைக்கவேண்டும்பத்தா
உருப்பானமூளைபத்தி வாங்கவேணும்
கண்ணுக்கறிகள்நீலமே பொறிக்கவேண்டுமடபத்தா

கரங்கறிகள்வேறே சமைக்கவேண்டும்
பதினொருவிதமாக தலைக்கறிதன்னிலே
பககுவமாகவே சமைக்கவேணும்
அறுத்தறுண்டந்தலையை குளிப்பாட்டித்தாயார்
குழிதாவிசட்டியில்வைத்து அவிக்கவேண்டுமே
அவித்தறுண்டந்தன்னை பெற்றதாயாரெடுத்து
அறிவாமணையில்வைத்து அறியவேணும்
ஈரல்பிலக்குவேறே சமைக்கவேண்டும்பத்தா
யிறைசசிவிதமாய்ப் பொரிக்கவேண்டும்
நெஞ்சடிநிணக்குடல் வாங்கவேண்டும்பத்தா
நிணக்குடலொருசட்டி சமைக்கவேண்டுமே
பொன்பூண்டமார்பையும நெஞ்சாக்குடலையும்
பொரிக்கறியாகவே சமைக்கவேணும
மூழங்காலெலும்புகள் மூள்ளெலும்பெல்லாம்
மூளக்குநீராகவே செய்யவேணும்
கணுக்கலெலும்புகள் கணுவெலும்பெல்லாம்
க்ருசமூவர்ணமாகப் பொறிக்கவேண்டுமே
பாடகமிட்டிருந்த கணுக்கால்ரெண்டையும்
பட்டாடைமேலேவைத்து கறிக்கவேண்டும்
மோதிரமிட்டிருந்த மூன்விரல்பதத்தையு
முழுமுழுவானமாகப் பொறிக்கவேணும்
பேரானபெருந்துடை சதைகள்வகுத்தல்லோ
பொன்போல்பொரித்தெடுத்து சமைக்கவேண்டுமே
மார்புசதைகள்வேறே பொறிககவேணும்பத்தா
வலதுதுடைகள்வேறே பொறிக்கவேணும்
ஆறப்பொரியலும அவட்டலும்துவட்டலும்
பணியாரவிகத்துடன்பலவகையும
எண்ணிஎண்ணியொரு பிருபத்தொருவிதமாக
பலபலவால்கறி சமைக்கவேண்டும்
பலபலவாகக்கறி சமைக்கவேண்டும்பத்தா
மூனுபாண்டத்தில்வேறே சாதம்சமைக்க வேண்டும்
இப்படிக்கறிதேடி படைப்பார்களெங்கள்
அக்கிராபுவியுள்ள மனிதரெல்லாம
பெற்றபோதுண்டான சந்தோஷமபோற
பிள்ளையைஅழைக்கும்போதுண்டாகவேணுமடா
அழைக்கும்போதுண்டான சந்தோஷமபோல
பிள்ளையைஅறுக்கும்போதுண்டாகவேணுமடா
அறுக்கும்போதுண்டான சந்தோஷம்போல
அவிக்கும்போதுண்டாக வேண்டுமடா
அவிக்குமபோதுண்டான சந்தோஷம்போல
அறியும்போதுண்டாகவேண்டுமடா
அறியும்போதுண்டான சந்தோஷம்போல

கறிசமைக்கும்போதுண்டாகவேண்டுமடா
சமைக்கும்போதுண்டான சந்தோஷம்போல வென்னை
அழைக்கும்போதுண்டாகவேண்டுமடா
அழைக்கும்போதுண்டான சந்தோஷம்போல
அமுதுபடைக்கும்போதுண்டாகவேண்டுமடா
அமுதுங்கறியுமாக நிறவுமளவிலே
தமிழுங்கிரந்தமுமாம் மணக்கவேண்டும்
தமிழுங்கிரந்தமுமாய் மணக்கவேண்டுமுந்தன
தையலல்லால் சம்மதிக்கவேண்டுமடா
அப்படிக்குகறிதேடி படைக்கிறேன்சுவாமி
அடியனார்மடத்துக்கு வாருமையா
காலங்கலிவுகாலம் கெட்டகாலம்பத்தா
கடனசொன்னவார்த்தையைமறக்குங்காலம்
தம்பிக்குத்தமையன் பகையாவிபெற்ற
தானேபெரியவன் கோலமாகி
காடுசிறுத்தல்லவோ நாடுபெறுத்து
கடுகியேவருகிற கலிவுகாலம்
குருவிருந்தஆசனத்தில் சிஷனிருந்து
கூறுங்கலையுரைக்கும் கொடியகாலம்
கொடுத்தகடனைகேட்பாரை கொல்லுங்காலம்பத்தா
கூசாமல்பெரியோரை வையுங்காலம்
பெற்றதாய்புத்திசொன்னாலுதைக்குங்காலங் கொண்ட
பெண்சாதிமயிர்பிடித்தால் பொறுக்குங்காலம்
கற்றவரைகல்லா லெறியுங்காலம்பத்தா
காலாதிகலியுக காலந்தானே
பிள்ளைக்கறியுஞ்சோறும் போடுகிறேனென்று
போதவேயெமக்குநீர் தாரைவாரும்
தண்ணியள்ளியெந்தனுக்கு தாரைவார்த்திராமானால்
வருவதுமெய்யாகும் அன்பனே
சத்தியம்பிரமாணிக்கம் செய்யவேண்டுமோர்சுவாமி
ஓமென்றுசொல்லுக்குப் போதாதோ
அய்யர்கைதிருச்சங்கு செபகண்டிவாங்கி
காவேரிசலந்தனைக் கொண்டுவந்தா
அய்யர்கைதாழ்வுமாய் அன்பன்கைமேலுமாய்
அள்ளியெமக்குநீ தாரைவாரும்
அய்யாகைமேலுமாய் அன்பன்கைதாழ்வுமாய்
அள்ளியேவிபூதி தானளித்தார்
உச்சிக்கிமுன்னமே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்மூன்று தாரைவார்த்தான்
உச்சியாலோரடி தாழ்ந்ததேயுண்டானால்

உன்னோடே உனனிடமனையிடத்தில்
உச்சிக்கிமுன்னாலே அமுதுபடைப்பேனென்று
சததியமாய்முகந்துநீர் தாரைவார்த்தார்
முக்காலுமுகந்துநீர் வார்த்தசிறுத்தொண்டன்
நடந்தானேதிரு மடந்தனைநோக்கி
வேண்பிடைதத்துக்கு நடக்குமளவிலே
வேதேகிலேசங்களை மனதிலெண்ணான்
பெண்சாதிவெண்காட்டாள் மனதறியாமல்
பிள்ளைகறியுஞ்சோறு சொல்லிவைத்தேன்
மனையாட்குவெண்காட்டாள் மனதறியாமல்
மைந்தனகறியுஞ்சோறும சொல்லிவந்தேன்
பெற்றவருத்தத்தனை பார்ப்பாளோஅவள்
பிள்ளைதன்னைகானறியே னென்பாளோதான்
வளர்த்த அருமைதன்னை பார்ப்பாளோதான்
அவள்மைந்தனைகானறியே னென்பாளோதான்
அரகேட்டேன்படிகேட்டேன் என்பாளோதான்
அசலார்கள்சொல்பேச்சை கேழ்ப்பாளோதான்
எடுத்தவக்குறைக ளின்றைக்குப்பொய்யாறு
பிட்சணமேஉயிரை விடுவோமென்று
மனதில்கிலேசமெண்ணி வருகிறவழிதனில
வந்தமர்ந்தார்விக்கின விநாயகரும
தொப்பைமுப்புரிநூ விலங்கிவரஅவர்
தும்பிக்கையுருபுரக்குலுங்கிவர
சங்குசககரம் சதுர்புஜமிலங்க
மேலில்தரித்தஉததிரம் துவண்டிலங்க
திங்களிலங்கத்திரு நயமிலங்கிட
செஞ்சிலம்போசை நின்றுகுலுங்கிவிட
வந்தமனதாரசிறுத்தொண்டன்வருமவழி
வழங்குமபிரார்த்தனைகள் செய்வானென்றே
கண்டநமனைசிறுத்தொண்டன் பிள்ளையார்கோவிலிலே
யெண்கலிகள்குறைதீர்க்கவந்தவரோ
மூக்கால்வலம்வந்து மூணுகுட்டிகுட்டி
மூஷிகவாகனரே தஞ்சமையா
என்பெண்சாதிமனது என்மனதுபோலானால்
பொற்குடங்கவிழ்க்கிறேன் பிள்ளையாரேவுனக்கு
பொற்குடங்கவிழ்க்கிறேன் பிள்ளையாரேவுனக்கு
போதபடையல் படைத்திடுவேன்
கூரையாலகட்டியிருந்த பிள்ளையார்கோவில்தன்னை
கல்லாலேகட்டிவைப்பேன் பிள்ளையாரே
கல்லாலேகட்டிவைத்த பிள்ளையார்கோவிலை
செம்பாலேகட்டிவைப்பேன் பிள்ளையாரே
செம்பாலேகட்டிவைத்த பிள்ளையார்கோவிலை

தங்கத்தகால் கட்டிவைப்பேன் பிள்ளையாரே
தங்கத்தாலிழைத்த பிள்ளையார் கோவிலே
மாணிக்கத்தகாலிழைப்பேன் பிள்ளையாரே
சாலக்கிண்ணி பாலக்கிண்ணி பதித்திடுவேன் உமக்கு
தையனல்லாள் சம்மதிக்கவேணுமையா
பொற்குடங்கவிழ்க்கிறேன் பிள்ளையாரே உமக்கு
என்பெண்சாதி சம்மதிக்கவேணுமையா
இப்படியாகவே பிள்ளையாரை வேண்டி
வெண்காடுநங்கை தன்னைமிகவருந்தி
திரும்பிவருகையில் சிறுத்தொண்டபத்தன்
திருவெண்காட்டுநங்கை மனதிலென்னுள்
தம்பிரானைத் தேடிப்போன அன்பனைக்காணுமென்று
தானுமே தேடியே வருகலுற்றான்
வேண்டிமடத்துக்கிளி நடக்குமளவில்
வெண்காட்டுநங்கையம்மா எதிரேவந்தாள்
கண்டானே சிறுத்தொண்டன் வெண்காட்டுநங்கையை
கைதொழுதாளம்மன் கணவன்முன்னே
பொற்றுரும்பைக்கிள்ளி போடுவானும்பத்தன்
மெய்த்துரும்பாகமனைத் சோதிப்பாளாம்
பொன்னானமேனியெல்லாம புழுதிபடர்ந்ததென்று
சொல்லிசொல்லிமெய்யாகத் துடைப்பானும்
தாலிசரட்டைமெள்ளத் தடவுவானும்பத்தன்
தலைமேல்துரும்பைக் கையாலெடுப்பானும்
கணவன்மரிசங்களைக் கண்டல்லோவெண்காட்டாள்
கலுக்கென்றுநடுத்தெதுமவளேது சொல்வாள்
அஞ்சுபிராயத்திலேகையுந்தந்தேன்பத்தா
ஆயிரப்பெருநதெருவு வதமாய்வந்தேன்
சின்னவயதினில்வந்த தந்தேனடியேன்
சீராளதேவனையும் பெற்றெடுத்தேன்
பாலகன்சீராளன் பிறந்துசமர்த்தனாய்
பள்ளிக்குள்ருசித்திரனாய் தான்வளர்ந்தான்
இதுவடிவிலிதுவளவில் இல்லாதகாரியம்
யேததவங்காரியம் ளேர்தோ வென்றார்
எத்தவங்காரியங்கள் மெத்தமெத்தபெண்ணே
உன்னாலேஎன்னாலேமுடியாதடி
முடியாதகாரியங்கள் முடியாது பத்தா
முளையில்லாபயிரது விளையாது
இடியிடித்தால்மழை பொழியாதநாட்டிலே
யெழுதாதசித்திரங்க ளுலகிலுண்டோ
கட்டிமடியாதகள்ளனுண்டோபத்தா
கலங்கித்தெளியாத தண்ணீருண்டோ

நானையறியாதகுளமுண்டோபக்தா
நமனையறியாமலுயிர்போமோ
என்னையறியாதகாரியங்கள்வேறுண்டோ
யேத்தவந்தகாரியங்கள்சொல்லுமென்றாள்
தம்பிரானசொன்னசொல்லைகேட்டையானால்பெண்ணே
சலிப்பாகவேவிழுந்தழுவாயடி
மறப்பாயேமறந்திருப்பாயோடிபெண்ணே
வரத்தினால்செய்ததொருதவத்தாலே
பெற்றவருத்தந்தன்னைப்பார்ப்பாயோபெண்ணே
மைந்தனைநானறியேனென்பாயோடி
வளர்த்தவருத்தந்தன்னைபார்ப்பாயோபெண்ணே
பிள்ளைதன்னைநானறியேனென்பாயோடி
அடிகெட்டேன்பிடிகெட்டேனென்பாயோபெண்ணே
அசலார்கள்சொல்வார்த்தைகேட்பாயோடி
அப்படிக்கொருநாளும்வருவதில்லைதேவா
ஐயர்சொன்னவார்த்தையைசொல்லுமென்றாள்
பிள்ளைக்கறியுஞ்சோறும் போடுகிறேனென்று
பொருந்திவந்தேன்திருவெண்காட்டுநங்கையென்றான்
மைந்தன்கறியுஞ்சோறும் போடுகிறேனென்று
வருந்திவந்தேன்திருவெண்காட்டுநங்கையென்றான்
விரதவரத்தாலே நமக்கென்னகாரியம்
யிதுவொருபெரிதாகச்சொல்லவந்தாய்
விட்டகுறைவந்தால் விதியின்பயனல்ல
வேறொருகாரியங்களெண்ணப்போமோ
கட்டவன்அறுக்கின்ற பருவங்கள்வந்தாலே
கருபோகம்சராபோகம்தானல்லவோ
பிள்ளைக்கறியுஞ்சோறும் போடுகிறேனென்று
பொயயாதவந்தன்னை நிலைநிறுத்தும்
இன்னமிவள்மனதை சோதிப்போமென்று
யென்னசொல்லுவான்சிறுத்தொண்டபத்தனவன்
பொன்னைபொருளைக்கொஞ்சம் தருவாயோடிபெண்ணே
பூமியிலேபுத்திரனைக்கொண்டுவாரேன்
காசுபணத்தைகொஞ்சம் தருவாயோடிபெண்ணே
கண்ணறியாப்பாலகனைகொண்டுவாரேன்
தேசயதிரவியம்தாராயோபெண்ணே
சிறுபிள்ளையராய்க்கொண்டுவாரேன்
பொன்னைப்பொருளைத்தான்தந்தாலும் ... ன்பா
பூமியிற்புத்திரனைத் தருவாருண்டோ
காசுபணத்தைதான்தந்தாலும ...
கண்ணறியாப்பாலகனைத் தருவாருண்டோ

அப்படிமல்லவென்று தந்தாலுமப்பனே
    பிள்ளையைஅறுத்துக் கறிசமைக்கத்தருவாருண்டோ
அறுத்துக்கறிசமைக்கத்தந்தாலுமப்பா
    அடியார்க்குஅன்புடனேபடைப்பாருண்டோ
தோட்டத்துமரக்கறி யிங்கிருக்கத்தா
    அங்காடிகறிதேடிபோவாருண்டோ
அத்தமரக்கறி யிக்கிருக்கபக்கா
    அங்காடிகறிதேடிபோவாருண்டோ
நங்கையடிசுறிக ளிங்கிருக்கடக்க
    நாட்டிலேகறிதேடிபோவாருண்டோ
தோட்டத்துமரக்கறிபாவ தும்பெண்ணே
    சொன்னாரேவுடற்கூராகாதென்றார்
அகத்துமரக்கறியாவதும்பெண்ணே
    ஐயருடற்கூ ராகாதென்றார்
தோட்டத்துமரக்கறி யாவதுமன்பா
    நமக்குநம்மிடபிள்ளை சீராளன்தான்
நாம்பெற்றபிள்ளைநாமேயறுத்திட்டால்
    நமக்கேதவங்கள்வந்துசேருமென்றான்
பத்திரமும்முக்கணையு மெடுத்துக்கடடி பிள்ளை
    பள்ளிக்குதோழன்பின்னேகண்ட சூழ்ந்தான்
இப்போஉண்டுயிப்போபோனதம்பிசீராளன்
    என்னசொல்லினானழைப்பேன்பெண்ணேயென்றான்
அறுக்கப்பொறுந்திவந்தனையனோதொண்டா
    அழைக்கமதிகள்சற்றுமறியாயோ
அச்சுடர்வனத்துக் குள்ளிருந்துவந்த
    ளமமான்மார்வந்தாரென்றுதானழையும்
அம்மான்மாரவந்தாரென் றழைத்தால்பெண்ணே
    அதிசயமென்னகொண்டுவந்தாரென்பான்
பொன்பெரியபுத்தகங்கள் கொண்டுவந்தாரென்று
    பொன்னாலேயெழுத்தாணிகொண்டுவந்தார்
நீலக்கண்ணாடிகள்கொண்டுவந்தாரென்று
    கோலச்சிற்றுடைகள்கொண்டுவந்தார்
தேமாங்கனிப்பழங்கள்கொண்டுவந்தாரென்று
    திருநீற்றுவுண்டைபழங்கொண்டுவந்தார்
இத்தனைப்பணிவகைச் சித்தாகச்சொல்லி
    யேத்தயழைத்தோடிவாருமென்றான்
திருமதுரைப்பள்ளிக்கு சிறுத்தொண்டபத்தன்
    சீராளனையழைக்கத்தானடந்தார்
ஆத்திமரத்தடியிலவீற்றிருக்குஞ்சுவாமி
    அறியாதகுழந்தையனஞ்சோதிப்பாரா

அங்குமொருசீராளன் மனமறியவென்று
அனுப்பினாநித்திராதேவிதன்னை
நித்திராதேவிவந்து நினைவைகுலைக்கின்றுன்
நீங்காதசரஸ்வதி விலக்கிடவே
சிந்தைகலங்கிபிள்ளை சீராளதேவனும்
சீக்கிரதத்தில்வாத்தியாரை தெண்டம்பண்ணுன்
ஒருநாளும்வாராத நித்திரைகள் சுவாமி
உண்டாகி அறிவு மழியுதையா
காலம்பொழுதில் ரலன்னம்பொசித்தல்லோ
காலங்கள்வேறுபடவந்ததினுல்
மங்கக்கண்வந்தாலே சீராளதேவனே
மைந்தர்தோழன்மடியில்பள்ளிகொள்ளும
பள்ளிக்குப்படிக்கின்றதோழர்மடியிலே
பாலகன்சீராளன் நித்திரைசெய்தான்
நித்திரைமயக்கத்தில்பொல்லாதசொற்பனம்
நிண்ணபடிஉரக்கக்கண்டுவிட்டான்
அல்லல்கனவுகண்டு சீராளதேவனும்
மலறிப்புலம்பியலலோதானெழுந்தான்
பொல்லாதகனவுகண்டு சீராளதேவனும்
புலம்பியலறியல்லோதானெழுந்தான்
கண்ணீர்ததும்பியிருகால்நடுங்கமனம்
கைசோரமெய்சோரகலங்கிகழ
தூங்கியெழுந்திருந்து சீராளதேவனும்
குருசுடன்வாத்தியாரைசரணம்பண்ணுன்
இன்னுளும்நித்திரைசெய்தால்தம்பிசீராளா
யிலங்குஞ்செந்தாமரைப்போல்முகமிருக்கும
புல்வாடல்பட்டதொரு காரியமென்ன
புயங்கள்துடிக்கவந்தவிதமென்ன
தூங்கினேன்பிள்ளை நான்கண்டகனவையா
திடுக்கென்றுற்போலே சந்தேகந்தோணுதையா
என்னென்னசொற்பனங்கண்டாயோ அப்பா
யென்னோடேஒளியாதேசொல்லுமென்றுர்
ஆறுபெருக்கக்கண்டாயோதம்பி
அரசயிலைவிற்கக்கண்டாயோடா
ஏரிபெருக்கக்கண்டாயோதம்பி
எருக்கயிலைவிற்கக்கண்டாயோடா
குளங்கள்நிறையக்கண்டதில்லைசுவாமி
கோட்டைமுனைக்கக்கண்டதில்லை
தாயார்க்கொருமுறைகள்கண்டதில்லைசுவாமி
தகப்பனுக்கொருதோஷங்கண்டதில்லை
ஊருக்கொருகுறைகள்கண்டதில்லைசுவாமி
உற்றானுக்கொருதோஷங்கண்டதில்லை

என்னோடோன்போகக்கண்ட கனவையா
எனக்கென்னமுடியுமோ காணறியேன்
கன்னிகையாகவே கலியுகந்தன்னிலே
என்னைப்பெத்தது அப்பன் தோளில்வைத்து
எனையெடுத்து அப்பன்தோளின்மேலேவைத்து
எழில்பெரியமாளிகைக்குகொண்டுசென்றார்
வங்கள்மாதாபுலம்பிவந்து எதிராகவாங்கி
மடிதன்னில்வைத்துப்பால்கொடுக்கக்கண்டேன்
மடியிலிருந்தொரு மைந்தனைக்கொண்டுசென்று
மாணிக்கத்தொட்டிலிலேவளர்த்தக்கண்டேன்
சாம்பரிந்தஐங்கலட்பூ மல்லிகைமெத்தையின்மேல்
கைசல்லாமடித்துயென்னை வளர்த்தக்கண்டேன்
சந்தனக்கையொன்று சாதியொருபுறம
தாயாரொருபுறம தாலாட்டக்கண்டேன்
தாலாட்டும்பிள்ளையை தாயாரெடுத்தல்லோ
தங்கப்பொற்பலகையி லிருத்தக்கண்டேன்
தாயாருக்கைகால்கள் பிடிக்கக்கண்டேன்பெற்ற
தகப்பனுமென்கழுத்தையறுக்கக்கண்டேன்
கழுத்தைஅறுத்த அதில் கழன்றவுதிரத்தை
கறிசட்டிதனில்வேறே வறுக்கக்கண்டேன்
உலரஉலரவறுத்ததை செய்தனில்
உதிரப்பொரியல்வேறே சமைக்கக்கண்டேன்
உரலிலேதலைபோட்டு துவைக்கக்கண்டேன்தாதி
உறுப்பானமூளைபத்தும்வாங்கக்கண்டேன்
கண்ணுக்கறிகள்வேறேசமைக்கக்கண்டேன்சுவாமி
காதுக்கறிகள்வேறே பொறிக்கக்கண்டேன்
மூக்குக்கறிகள்வேறேசமைக்கக்கண்டேன்
நாக்குக்கறிகளவேறேபொரிக்கக்கண்டேன்
பதினொருவிதமாக தலைக்கறியானதை
பாங்குடனேவேறேகாதி சமைக்கக்கண்டேன்
அறுத்தமுண்டந்தன்னை குளிப்பாட்டிததாயார்
குழிக்தாளிதனில்வைத்து அவிக்கக்கண்டேன்
கொந்தியகடுதன்னை யிருதாளில்வைத்து
குலுங்கவேதீமூட்டி அவிக்கக்கண்டேன்
அவித்தமுண்டந்தனை யிறக்கியேதாயார்
அருவாமணையில்வைத்து அறியக்கண்டேன்
ஈரல்பிளந்துவேறே சமைக்கக்கண்டேன்சுவாமி
இறைச்சிகள்விதவிதமாய்பொரிக்கக்கண்டேன்
பக்கத்தெலும்புகள் பழுவெலும்பானதை
பதைக்கப்பதைக்கப்பிடித்தறுக்கக்கண்டேன்
நெஞ்சடிநிணக்குடல்வாங்கக்கண்டேன்
நிணக்குடல்வேறேசட்டி சமைக்கக்கண்டேன்

பொன்பூண்டமார்பையும்நெஞ்சாங்குடலையும்
  பொறிக்கறியாகவேசமைக்கக்கண்டேன்
பாடகமிட்டிருந்த கணுக்காலுமடியிலே
  பட்டாடைமேலேவைத்துத்ரிக்கக்கண்டேன்
மோதிரமிட்டிருந்த முனைவிரல்பத்தையும்
  முழுமுழுவர்னமாசப்பொரிக்கக்கண்டேன்
எண்ணிஎண்ணியெல்லாம்பிருபததோர்தினுசாக
  பலடலவிதமாகசமைக்கக்கண்டேன்
பலபலவர்க்கமாகச சமைக்கக்கண்டேன்மூன்று
  பாண்டத்தில்வேறேசாதம்சமைக்கக்கண்டேன்
ஆமல்பொரியலும்அவட்டல்துவட்டலும
  பணியாரவிதத்துடனபலவகையும
உருக்கிபசெய்களுடன்பொறிக்கறியாஞ்சுவாமி
  உளுந்துவடையுடன்மாங்கனியாம்
வருந்திவருந்தியொரு விருந்துக்கோனையனைப்
  பண்டாரந்தன்னைவிட்டிலழைக்கக்கண்டேன்
ஐயரும்உள்ளுவந் திருக்கக்கண்டேன்
  யெங்களப்பாவும்எதிர்பட்டுவரவுக்கண்டேன்
போதும்போதுபிள்ளாநீ கண்டகனவப்பா
  பொல்லாதசொற்பனத்தைகண்டாயோடா
நீகண்டசொற்பனங்கள்நீங்கும்படிக்கல்லோ
  கைலாயதிருமுறையோதுமென்றார்
ஆயிரந்திருமுறையோதினுலுஞ்சுவாமி
  அறுக்கததவறுமோசொல்லுமென்றார்
கேடித்திருமுறையோதினுலுஞ்சுவாமி
  என்னைக்கொல்லத்தவறுமோசொல்லுமென்றார்
ஆனாலுங்குருமொழி தவறவொண்ணுதுகாண்
  அப்படியேதிருமுறையோதுவன்காண்
அறிவோமஅறியவென்று வேதபபெரும்புராணம்
  கைலாயத்திருமுறையோதுவானும்
கைலாயத்திருமுறையோதுமளவிலே
  தமிழானசிறுததொண்டன்மகனேயென்றான்
தகப்பனைக்கண்டல்லோதம்பிசீராளனும்
  தன்பள்ளிகூடத்திலேபோயொளித்தான்
வந்ததொருசிறுத்தொண்டனபள்ளிக்கூடந்தேடி
  வாசிக்கும்பிள்ளைகளைத்தானழைத்து
எங்கள்குடிபிள்ளை யிங்கில்லையோதம்பி
  யெங்களுக்கும்பாலகனுரிங்கில்லையோ
பள்ளியிலேகூடி விளையாடுகிறதப்பி
  பட்சமுடனுனதகப்ப னழைக்குகின்றார்
சிந்தைதெளிந்துமே சீராளதேவனும்
  சீக்கிரத்தில்வாத்தியார்தன்முனனேவந்தான்

வாத்தியாரைத்தெண்டம் பண்ணுவானுந்தம்பி
தோழமாரையோடிவந்துக்கடிவானும்
கள்ளமுண்டோசுவாமி கள்ளமுண்டோவையா
கண்டகனவிலேகொஞ்சமபழுதுமுண்டோ
பொய்களுண்டோசுவாமிசொன்னதவிலே
தொழுதலலோஎங்களப்பாவந்தாலையா
அழைக்கின்றதகப்பனாரவர்பின்னேபோனாலே
அடியேன்யக்துந்தனபாக்கங்காண்டேனேதான்
முத்துக்கடுக்கன்கழட்டுவானுமைந்தன்
மோகனமாலைதனைவாங்குவானும்
அஷ்டாபரணமெல்லாங் கழற்றுவானுந்தம்பி
அபரஞ்சிமாலைதன்னை வாங்குவானும்
தாளிப்பதக்கங்கள் சரிகைத்துப்பட்டாக்கள்
சந்திராகாரந்தன்னைவாங்குவானும்
பொன்னாபரணங்கள்பட்டாடைகழட்டியே
போற்றிசெய்தவாத்தியார்தன்முன்னேவைத்தான்
கண்ணோடேகழட்டிபேபால்பக பதெட்டும்
வாத்தியார்க்குத்தந்துணைக்கேசரணமென்றான்
முக்கால்வலம்வந்து சீராளதேவனும்
முத்தமிழ்வாத்தியார்க்கே தெண்டனிட்டான்
வந்தாலேஇங்குவந்துவாசிக்கின்றேனடியேன்
வருகாமற்போனாலீசன்பதமடைவேன்
சேர்ந்தல்லோகாஙகாம் பதவிக்கிடமாகி
தெய்வலோகமபதவி பெற்றுவாழ்வேன்
தந்தைவந்தழைக்கின்றார்வெகுநேரமாயிற்று
நாம்தங்களில்லாமலேசில்வருநனும்
அறிவுள்ளசீராளா உன்னைப்போலகல்விகள்
ஆயிரம்பிள்ளைகளில்நானறியேன்
அறிவென்றசொல்லுனக்கு சொன்னேனேயல்லாமல்
ஆயிரஞ்சுருதிநூல்நீபடித்தாய்
ஆயிரம்பிள்ளைகட்கு நீயேதலைவனாய்
ஐபருக்கொருகுறைவாராமலே
குறைவில்லாதபாக்கியங்கள் எனக்களித்துத்தம்பி
கூடியிருந்துபாடிசலுண்டு
விட்டுப்பிரியவல்லோசீராளதேவா நீ
வேறானசொற்பனங்கள கண்டுசொன்னாய்
அறியாதான்கண்டகனா சீராளாதேவா நான்
அசலார்க்குக்தாங்குமென்றேநானிருந்தேன்
பாலன்கண்டகனா சீராளதேவா நான்
பலபேருக்குசாயுமென்றேநானிருந்தேன்
நீகண்டசொற்பனங் ஞனக்கேவித்தந்து

கின்னுட்சிவன்செய லென்னமோதான்
ஆனாச்சதமெனமேன் சீராளதேவா
அன்னியனைத்தஞ்சமென்று நான்வளைப்பேன்
எவனைச்சதமென்பேன் சீராளதேவா
இனியாரைத்தஞ்சமென்று நான்கனைப்பேன்
போரீரோ என்னைவிட்டு சீராளதேவா தம்பி
புண்ணியவானே நானென்னசெய்வேன்

சீராளதேவன் வாத்தியாருக்கு நேரச்சொல்லுதல்,

தங்களுடனிலென்னசுவாமி யுனக்கையா
தலைமுறைமூன்றுக்குந்தனமிருக்க
ஏங்கியிருக்கவேண்டாம் என்றலைவிதியைத்தான்
எவராலவிலக்கவசஞ்சொல்லுமையா
என்னையறுத்துக்கறிசமைத்து ஆண்டிகளிடவே
ஆதியிலயனைவிதிப்படியனால்
உன்னாலுமென்னாலுமாவதுண்டோசுவாமி
ஊழ்வினைப்பயன்றனைவிலக்கவென்றால்
மண்டையிலேயெழுதி மயிரால்மறைத்தல்லோ
வைத்தானென்னுடையதலைவிதியை
மண்ணோடேமண்ணாக மறைந்துவிடுந்தேகம்
வளர்க்கின்றஅக்கினியாலெரிந்துவிடும்
காக்காய்கழுகுகள் நாய்நரிபுழுக்களும்
கலந்துபிடுங்குமந்த தேகந்தன்னை
வீணாகப்போகாம லுனக்குதவியாக
விருந்துக்குபயோக மாயிருந்தேன்
எழுந்தையறுக்கவவர்வருகின்றவேளையில்
காத்தாவைநினைத்தொரு மந்திரஞ்சொல்லும்
கத்தியோடிகழுத்திலே வைக்குமளவிலே
டத்திமுத்திஓம்நமசிவாயவென்னும்
ஐந்தெழுத்துமந்திரத்தை நெஞ்சினில்தியானித்தால்
அதிலுன்கர்மமெல்ல மகனறவிடும்
அருளாறுந்தேவா அப்படியேயாகுமென்று
ஐயருக்குத்தீர்க்க நமஸ்காரஞ்செய்தான்

சீராளதேவன் தோழன்மாருக்குப்புத்திகூறல்.

வாத்தியாரைத்தெண்டஞ்செய்தல்லவோ தம்பி
நீதாழ்மையோடிவந்து கட்டிக்கொள்வான்
என்னுடன்வாசிக்கின்றதோழமாரேதம்பி
எழுபல்லநம்மிடகுருக்களையா
பள்ளிக்கூடங்களைபாமல்கற்றுக்கொள்ளுங்கள் தம்பி
சனியெண்ணெய்ப்படிவரட்டிதண்டிக்கொடுங்கள
மாதம் பரிப்பணம் தண்டிக்கொடுங்கள் தம்பி

வரவு அரிசிப்படி தான்கொடுங்கள்
நவமிக்கொருதரம் ஐயருக்குப்போனபணம்
கலமாகத்தானகொடுத்துக் காத்திடுங்கள்
நானிருந்தபாவனையாய் நீங்களிருங்கள் தம்பி
அரியென்றவாத்தியார்க்குத் தடைசொல்லாமல்
சீர்வனவாத்தியார்பிள்ளைகளிடத்தில்செலவுபெற்று

தன்மடத்திற்குவருகிறது

ஐயருக்கும்பிள்ளைகட்கும் ஆறுதலைசொல்லி
ஐயனார்முன்னேவந்து தெண்டஞ்செய்தார்
தன்னைப்பெற்றதகப்பனார் முன்னேவந்துசீராளன்
தயவுடனேயவனேதுசொல்வான்
வழியிலேகல்லுமுள்ளு கில்லுகள்கண்டாலென்
உள்ளங்கால்முள்ளோடிதைக்குமென்றான்
உள்ளங்கால்முள்ளோடி தைக்குதேயாமானால்
உதிரங்கள்மிகுதியாய்சொரிந்திடுமே
உதிரங்கள்மிகுதியாய்சொரிந்ததேயாமானால்
உண்ணரேஜபாவுந்தனமடந்தனிலே
என்னையெடுத்துவுந்தன் தோளினமேலேவைத்து
எழில்பெரியமாளிகைக்கு நடவுமென்றான்
சிரியவர்சொல்லும்புத்தி நிசமென்றெண்ணியே
பெரியவர்தோளினமேலெடுத்துக்கொண்டார்
பெரியவர்தோளின்மேலே யெடுக்கும்பொழுதிலே
பெருகுஞ்சுனையில்தாயார் முழுகுவாளாம
வெள்ளையானவஸ்திரத்தை கட்டுவாளாமங்கை
மெய்யானபுட்பங்களை முடித்துக்கொள்வாள்

திருவெண்காட்டுநங்கைசிறுத்தொண்டபத்தனையும்
சீராளதேவனையுங்காணாமல் வருந்துதல்

அனப்பன்வருகின்ற வழிக்குமுன்பாகவந்து
ஆலோசனைகள்செய்து யேதுசொல்வாளா
பிள்ளையையழைக்கப்போன சிறுத்தொண்டனை
யின்னம்வரக்காணேனென்னநான்செய்வேனென்பாள்
கதிபிறந்திங்கே வுலாவுதென்றாளநங்கை
கறிகூட்டுவர்க்கமெல்லாம் புளிக்குதென்பாள்
ஆத்தியடிதனில் வீற்றிருக்குமையா
அவர்பசியாலென்னசாபம தருவாரோவென்பாள்
பள்ளிகூடம்நோக்கி வெண்காட்டுநங்கைதானும்
பாலகளைப்பார்த்து தானுரைப்பாள்
நான்பெற்றமகனுமே வாராயோதம்பி
நல்லறிவுசீராளதேவா வாராயோடா
பள்ளிக்குப்பிள்ளைபேசி வாராயோடாதம்பி
பாலகன்சீராளதேவா வாராயோடா

கூவியழைக்கும்போது வெண்காட்டுநங்கைதானும்
கொப்பெனவேசிறுத்தொண்டன் முன்னேவாரான்
தாயாரழைக்குஞ்சத்தந் தன்னைகேட்டுசீராளன்
தகப்பனதோள்மீதிருந்து யேதுசொல்வான்
வந்தேனம்மாபிள்ளை வந்தேனம்மாதாயே
வருந்தாதவிருந்திட வாருமென்றான்
வந்தவொருபிள்ளை தன்னை மருந்தழைத்துத்தாயார்
வர்னமடியில்வைத்து பால்கொடுத்தாள்

திருவெண்காட்டுநங்கை சீராளனைக்குளிப்பாட்டி
தொட்டிலில்வைத்துதாலாட்டுதல்.

வர்னமடியில்வைத்து பால்கொடுத்துப்பிள்ளையை
மஞ்சாநீர்சாலைக்குக் கொண்டுசென்றார்
சம்பங்கியெண்ணெகொண்டு தாயுந்தகப்பனும்
தளரவேகூந்தற்கோதி காப்புமிட்டார்
பூவாசயெண்ணெயும் மணலெண்ணெயுங்கொட்டி
பிள்ளைப்பூமுடிக்கவர் காப்புமிட்டார்
சிக்காய்நெல்லியுடன் சிறுபருப்புக்கஸ்தூரி
சீராகப்பிள்ளை தலைக் கள்ளித்தெளித்தார்
வெந்நீர்விளாவி சிறுத்தொண்டன் தெளிக்கவே
வெண்காட்டுநங்கையம்மை தலைகோத
தாயுந்தகப்பனுமா முழுக்காட்டிபிள்ளைதன்னை
சரிகைதுப்பட்டாகொண்டு தலைதுவட்டி
நெற்றிக்குநெற்றிபட்டங் கட்டுவாள்தாயார்
நேர்விழிக்குமையெழுதி பொட்டுமிட்டாள்
முத்துக்கடுக்கனைப் போடுவாளாந்தாயார்
மோகனமாலைதன்னைப் பூட்டுவாளாம்
அஸ்தகடகங்கள் போடுவாளாந்தாயார்
அபரஞ்சிமாலைதன்னைப் பூட்டுவாளாம்
தாலிப்பதக்கங்களைப் பூட்டுவாளாந்தாயார்
சந்திரபிறைசூரியபிறை தரிப்பாளாம்
பொன்னாபரணமெல்லாம் பூட்டுவாளாந்தாயார்
பிள்ளைமுகத்தை யுற்றுப்பார்ப்பாளாம்
தாயார்முகத்தையுற்றுப் பார்த்துநகைத்தல்லோ
சந்தோஷத்துடன்பிள்ளை யேதுசொல்லும்
இத்தனையும்வேண்டுமோ மாதாவேஇப்பொழுது
இறந்துபோகும்பிள்ளை யெந்தனுக்கு
மதிக்கின்றேனென்றுசொல்லி மயங்காதேமகனேநீ
அறிந்தவயணந்தன்னைச் சொல்லாதேயோடா
திறிப்பேனழுவேனென்று சொல்லவந்தாயேநீ
தெய்வங்களும் நீங்களுமுளவானால்
அப்பாடாஅப்பாவென்று அழுதாலேயப்பன்

கழுத்தறுக்கக்கத்திதன்னை தீட்டுவாரே
அம்மாடியம்மாவென்று அழுதாலேயம்மா
வாய்ரொம்பஸ்தனத்தைக் கொண்டிருத்திவைப்பார்
தெய்வமேதெய்வமென்று அழுதாலேயென்னை
அறுத்திடத்தின்னவந்த தெய்வந்தானே
யாரைநினைத்தழுவேன் சொல்லுமம்மாதாயே
ஆயுசுமு[illegible] விதி சரியானால்
ஆத்காளீசகமென்றால் அறைகுறைதீருமென்று
அதினால்சிரித்தேனென்னைப் பெற்றதாயே
சீராளனுரைகேட்டு திருவெண்காட்டுநங்கை
சிரித்துத்தன்மகனுடனேதுசொல்வாள்
கற்றதொருகவிகளைப் பேசாதேயென்மகனே
கார்த்திருக்கிறாரையர் பசியுடனே
இந்நாளுமழலைச்சொல கேட்டிருப்பேன்மகனே
இன்றைக்குநேரமில்லை நித்திரைசெய்யும்
தூங்குதூங்குமகனே யென்றவள்தொட்டிலிலே
சொற்பெரியதொட்டிலிலே வளர்த்துவாளாம்
காம்பரிந் ஐங்கலமல்லிகை மெத்தையின்மேல்
கால்கோட்டைக்கைகோட்டை திண்டுமிட்டாள்
மல்லிகைமெத்தையின்மேல் மைந்தன்சீராளனை
மாதாவளர்த்தியே தாலாட்டலுற்றாள்
சந்தனநங்கையென்னுந் தாதியொருபுறம்
தாயாரொருபுறந் தாலாட்டுகின்றாள்
நித்திரைப்போமகனே நித்திரைபோஅப்பா
சித்திரப்பொன்தொட்டிலிலே நித்திரைபோடா
கட்டிக்கரும்பேநீ நித்திரைபோமகனே
கணுவிலாச்செங்கரும்பே நித்திரைபோடா
வேலிக்கரும்பேநீ நித்திரைபோமகனே
விடாய்தீர்க்குஞ்செங்கரும்பே நித்திரைபோடா
பிள்ளையில்லையென்றுசொல்லி தில்லைவனம்போய்முழுகி
போகத்தவமிருந்தே னென்மகனே
மைந்தனில்லையென்றுசொல்லி வானவனைத்தானோக்கி
வருந்தித்தவமிருந்தே னென்மகனே
மழைமாசிபோல்வந்து வயிற்றிலவதரிக்கல்லோ
மைந்தனெனவந்து குறைதீர்த்தோனே
கொடிமாசிபோலேயல்லோ வயிற்றில்தரித்துநீ
கொஞ்சியேகல்வியெல்லாந் தீர்த்தவனே
பிள்ளைகலியெனக்கு தீர்க்கவந்தோனேயென்
பெருமானே நித்திரைநீபோடா
மைந்தன்கலியெனக்கு தீர்க்கவந்தோனேயென்
மகனேநீநித்திரைபோ கண்மணியே

வண்டினங்கள்பாட மரங்களிலேசோர
வாழுமன்னங்களது கவிபூட்ட
மாடப்புறாக்களும் மயிலுமொருபுறம்
மைந்தன்சீராளனுக்குத் தாலாட்டக்
தாலாட்டத்தாலாட்ட சீராள்தேவனுக்கு
தாங்குகண்ணு நித்திரைகள்வாறாமல்
ஆதிசிவன்றனை அறிவில்நினைக்கல்லோ
அன்பானசீராளதேவ னேதுசொல்வான்
நித்திரைவாறாமல் வீற்றிருக்கநான்
நீங்களும்பசியுடன் காத்திருக்க
அறுத்துக்கறிசமைக்க சமையங்களில்லாமல்
ஆச்சிமாரிருவர் தாலாட்டிருக்க
பாவங்கள்வந்தணுகாமல் தவங்கள்வந்தணுகவே
பாருங்கிருபைசெய்யும் பரமசங்கமரே
அறியும்பொழுதும் யெமவாதனையில்லாமல்
அந்நேரங்காலனை தியானஞ்செய்தார்
ஈசனை நினைந்துயிரு கண்ணைமூடி
இருக்கின்றானே நித்திரைவந்தவன்போல்

## சிறுத்தொண்டபத்தனும் திருவெண்காட்டுநங்கையும் சீராளனை அறுக்கின்றது.

சந்தனப்பலகையை தாழவைத்துஅன்பன்
சதிருடனேகத்தியைத் தீட்டுவானும்
குங்குமப்பலகையை தாழவைத்துஅன்பன்
குளிரக்குளிரக்கத்தி தீட்டுவானும்
கத்தியிழையத்தீட்டி கையிற்பிடித்தானே
கண்காட்டிவெண்காட்டா ளென்னசெய்தாள்
மைந்தனைவாரியவள் மார்போடணைத்துவந்து
மாணிக்கபீடத்திலே வளர்த்தினாளே
பொற்பலகைமீதி லிருத்துவைத்துத்தாயார்
பிரளாமல்காலுங்கையு மேபிடித்தாள்
கர்த்தனை நினைந்தல்லோ கத்தியெடுத்துபத்தன்
கழுத்தையறுக்கமனந் தான்துணிந்தான்
தாயாருங்கைகாலும் பிடிக்கவேபெற்ற
தகப்பனுங்கழுத்தை யறுப்பானும்
ஸ்ரீஅரிராமாவென்று சொல்லியேசீராளன்
ஊட்டியிலேகத்தி நாட்டுவாரும்
அப்போதுசீராளன் அறிவுள்ளபாலகன்
அன்போடுதன்மனதி லென்னசொல்வான்
கத்தியோடிகழுத்திலே தாக்குமளவிலே
பத்திஓம்நமசிவாயா வென்பான்
பத்திமுத்திஓம்நமசி வாயாவென்றான்பிள்ளை

உண்டபாலுமுதிரமாய் சொரிந்திடுமாம்
பால்வாயைக்கண்டல்லோ சிறுத்தொண்டபத்தன்
உதறிகைகத்தியை மெள்ளசோரவிட்டான்
என்றுகதேன்பெற்ற மகனேமகனேயென்று
சிறுத்தொண்டபத்தனும் புலம்புவானும்
எட்டென்றாலொண்டு மினியறியாதபாலகனை
எட்டிலெழுதிவைத்துப் பார்த்ததில்லை
பத்தென்றாலொண்டு மினியறியாதபாலகனை
படத்திலெழுதிவைத்துப் பார்த்ததில்லை
புலம்பும்புருஷனைக்கண்டு திருவெண்காட்டாள்
புத்திமதிகள்திட மேதுசொல்வாள்
தலையறுந்துகட்டை தாழவிழப்போகுது
தவறுமலறுங்காணும் பிள்ளைதலையை
தூக்கிப்பிடித்தகொரு தலைதனிலேயின்னம்
கொண்டதவங்கள்து குறையாமல்
தாயாருங்கைகாலும் பிடிக்கவேபெற்ற
தகப்பனுங்கழுத்தை யறுப்பாராம்
கழுத்தையறுத்து கழன்றவுதிரத்தை
கறிசட்டிதனில்வேறே வாங்குவாளாம்
எடுத்தத்தப்பணியார பொரியலசமைத்தல்லோ
இடவந்தபெருஞ்சட்டி விறக்கிவைத்தாள்

தாதியைதலைக்கறி சமைக்கச்சொல்வது.

வாடிமகளாரே சந்தனநங்கையே
தலையைத்தான்கொண்டுபோய் புதைத்துவாடி
மறந்தானேசிறுத்தொண்டன் சொன்னசொல்தன்னை
மகாதேவரட்சணமே யேதுசெய்வார்
சிரந்தனைக்கரங்கொண்டு சென்றதொருதாதிக்கு
சீராளன்வாய திறந் தேதுசொல்வான்
தாயுந்தகப்பனுக்கு மறதிகளுண்டானால்
தாதியுனக்கு மதிகெட்டுதோடி
எண்சாணுடம்புக்கு சிரதேசிரதானம்
இதையறியார்கள் மானிடர்கள்
சொல்லப்பட்ட திருநாவு யிங்கிருக்கதாயே
சுகமறியாமூக்குக ளிங்கிருக்க
கேழ்க்கப்பட்ட திருச்செவி யிங்கிருக்கதாயே
எப்படிக்கிநீபுதைக்கப் போறாயம்மா
நரகமல்லோமுண்டாம நாறுமுடலை
நாதர்பொசிப்பதில்லை தாதியென்றான்
சமைத்துவைத்தாயானால் தாதிஉனக்கு
சாகாமல்குருபாதம் வரமளிப்பார்
அருளருளுந்தம்பி அப்படிநான்செய்வேன்

அந்நேரம்சந்தன நங்கையவள்
உரலிலேதலேபோட்டு துவைப்பாளாந்தாதி
உருப்பாமூளைபத்து வாங்குவாளாம்
கண்ணுக்கறிகள்வேறே,பொறிப்பாளாந்தாதி
காதுக்கறிகளவேறே சமைப்பாளாம்
அறுத்தமுண்டந்தன்னை முழுகிக்குளிப்பாட்டி
அவிக்கவென்றேயிருவ ரெடுத்துவந்தார்
கொத்திக்குளறியே பெருந்தாளியில்வைத்து
குறுகவேதீமூட்டி யவிப்பாளாம்
அவித்தமுண்டந்தன்னை யிறக்கியேதாயார்
அறிவாமணையில்வைத்து அரிவாளாம்
ஈரல்பிளந்துவேறே சமைப்பாளாமம்மாள்
இறைச்சிவிதம்விதமாய்ப் பொறிப்பாளாம்
பக்கத்தெலும்புகள் பழுவெலும்பானதை
பதைக்கப்பதைக்கப்பிடித் தறுப்பாளாம்
நெஞ்சடிநிணக்குடல் வாங்குவாளாமம்மாள்
நிணக்குடலொருசட்டி வாங்குவாளாம்
பொன்பூண்டமார்பையும் நெஞ்சாங்குடலேயும்
பொறிக்கறியாகவே சமைப்பாளாம்
மார்புகள்தகள்வேறே வகிருவாளாமம்மாள்
வலததுடைகள்வேறே பொறிப்பாளாம்
பாடகமிட்டதொரு கணுக்கால்மட்டிலே
பட்டாடைமேலேவைத்து தறிப்பாளாம்
முழங்காலெலும்புகள் முதுவெலும்பெல்லாம்
முளகுநீராகவே வைப்பாளாம்
கணுக்காலெலும்புகள் கணுவெலும்பெல்லாம்
கழுகழுவர்னமாகப் பொரிப்பாளாம
எண்ணியெண்ணியல்லோ யிருபத்தொருவிதமாய்
பலபலவர்னமாக சமைப்பாளாம்
பலபலவாகக்கறி சமைப்பாளாமம்மாள்
மூன்றுபாண்டததில் வேறேசாதம்சமைப்பாளாம்
ஆரவெபொரியலும் அவிட்டல்துவட்டலும்
பணியாரவிதத்துடன் பலவகையும்
புத்துருக்குநெய்யுருக்கிக் காச்சிவைத்தாளாம்
போகவேசங்கமரை கூட்டிவாவென்றாள்
காராவிநெய்யுருக்கி காச்சிவைத்தாளமமாள்
கடிகியேசங்கமரை அழையுமென்றாள்
இந்நேரம்சங்கமரும் இளப்பேறாடிருக்கிறார்
இட்சணமேசங்கமரை கூட்டிவாவென்றாள்
ஒருசுற்றுவேட்டியுந் தரித்தானும்
ஒருபக்கம்புணூலும் போடுவானும்

திருவெண்ணீர்அஞ்செழுத்தை போதுவானும்பத்தன்
திருக்கொன்றைமாலையொன்று போடுவானும்
திருக்கொன்றைமாலையொன்று மார்பில்அசையவே
திருவாத்திதிசைநோக்கி நடப்பானும்

சிறுத்தொண்டபத்தன் சுவாமியாகியபண்டாரத்தைக்காணுதல்.

திருவாத்திமரந்தன்னைத் தேடிவந்துபத்தன்
தெண்டநமஸ்காரஞ் செய்குவானும்
ஆத்திமரந்தன்னைத் தேடிவந்துபத்தன்
அடியேன்நமஸ்காரம் போற்றிநின்றான்
ஆதியேஉன்பாதம் போற்றிபோற்றிசிவனே
அம்பலவாணனாரே போற்றிஐயா
சோதியேஉன்பாதம் போற்றிபோற்றிசிவனே
சிதம்பரதேவனாரே போற்றிஐயா
ஆச்சுதுபோசனங்க ளப்பனாரேசிவனே
அமுதுண்ணமடத்துக்கு வாருமையா
ஆச்சுதுபோசனங்க ளையனாரேபரனே
அமுதுண்ணமடத்துக்கு வாருமையா
போற்றியிடுகிற சத்தந் தன்னைக்கேட்டு
புலிமுகவாணனார் முகம்பார்த்தார்
அழுகள்ளாதொழுகள்ளா யெழுந்திருடாபத்தா
ஆசாரக்கள்ளனே யெழுந்திருடா
கும்பிடுங்கள்ளாநீ யெழுந்திரும்பத்தா
குழைத்திடுங்கள்ளனே யெழுந்திருடா
அன்புள்ளகள்ளாநீ யெழுந்திரும்பத்தா
ஆசாரக்கள்ளாநீ யெழுந்திருடா
உச்சிக்குமுன்னாலே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்முகர்ந்துநீர் தாரைவார்த்தாய்
உச்சிக்குயோரடிதாழ்ந்து போச்சுதுபத்தா
உண்ணேனடா உன்னிடமனையிடத்தில்
உனக்கண்டவீட்டுக்காரா பத்தனொருவன்
அமுதுக்குவரச்சொன்னா னங்கேபோறேன்
மேலண்டைதெருவிலே பத்தனொருவன்
விபூதியையும்கெடுவு தருவேனென்றான்
இன்பமானபடிக்கி யிருந்தானொருவன்
இளைப்பாறிவந்தமர்ந்தே னப்பாவென்றார்
இனிமேலெனக்குஅன்னம தேவையுமில்லை
யெழுந்திரும்சிறுத்தொண்ட பத்தாவென்றார்
இப்படிக்கிதேவர்சொன்னா லேழைநானென்னசெய்வேன்
என்னாலேகுற்றமொன்று வருவதில்லை
போகவும்சென்றுதையா சிலநேரம்பிள்ளையை
அழைக்கவும்சென்றுதையா சிலநேரம்

அழைக்கவும்சென்றுதையா சிலநேரம்பிள்ளையை
அறுக்கவும்சென்றுதையா சிலநேரம்
அறுக்கவும்சென்றுதையா சிலநேரங்கறி
யறியவும்சென்றுதையா சிலநேரம்
அறியவுஞ்சென்றுதையா சிலநேரங்கறி
சமைக்கவுஞ்சென்றுதையா சிலநேரம்
கறிசமைக்கவுஞ்சென்றுதையா சிலநேரமிங்கே
வருகவும்சென்றுதையா சிலநேரம்
அந்தாலேகுற்றமில்லே தம்பிரானேசிவனே
அடியேன்மடத்துக்கு தேவரீர்வாருமையா
பிள்ளையறுத்துக்கறி சமைத்தாலென்னபத்தா
உன்பெண்சாதியும்நீயுமாய்க் கொள்ளுமென்றார்
இப்போவொருவன்வந்து போசனம்சொன்னான்
இதோபோறேனவனுட மனைக்கு
பொய்யன்களவன்சூதன் நீதான்பத்தா
யெழுந்திருயிந்த விடத்தைவிட்டு
பொய்யனகளவன்சூதன் நானல்லசுவாமி
போசனங்களுண்ணுதற்கு வாருமையா
ஆறுகுற்றம்நூறுபிழை அடியேன்செய்தாலும்
•ஐயர்மனம்பொருத்து எழுந்தருளும்
இந்நேரமதேவரீர்மெத்த யிளப்போடிருந்தீர்
எழுந்திரும்தேவ ரமுதுண்ணுதற்கு
ஐயர்தன்மனமிரங்கி சிறுத்தொண்டபத்தனே
ஆசனத்தைபெட்டா வாறேனென்றார்
இதுநல்லகருணைங்க ளாச்சுதுயென்று
யெடுத்தார்புலித்தோ லாசனத்தை
ஆசனத்தோல்போட்டு ஆத்திமரம்விட்டார்
அண்டர்முனிதேவர் கொண்டாட
இத்தெருவுகோடியிலே வருவேனோடாபத்தா
அத்தெருவுகோடியிலே வருவேனோடா
இச்சையானவீதியிலே பித்தனேரசிவனே
யெழுந்தருளும்தேவரே வாருமையா
திருமதுரைவீதியி லுள்ளோர்மனமறிய
வேணுமென்றுதிரும்பினார் சங்கமரும்
கலீல்கலீலென்று நடப்பாராமையர்
கால்பிணிநூலபிணி வாராமலே
ஆடியடமரகம் சாடிப்பாராமையர்
அண்டரண்டபுவனங்க ளதிர்ந்திடவே
திருக்கையிலடமரகம் சாடிப்பாராமையர்
தேவாதிதேவரெல்லாந் திடுக்கிடவே
திருவடிக்கமலமுந் திருச்சிலம்போசையும்
கையினில்சூல கபாலமுமே

கையினில்பிரம்பு கபாலந்தன்னையேந்தி
கயிலாசபிச்சை கேழ்ப்பாராம்
ஓலைக்கடன்முறிகிழிப் பாருண்டோவுலகில்
உத்தமதான தருமஞ் செய்வாருண்டோ
கூலிக்குத்தியன்னங் கொடுப்பாருண்டோவுலகில்
கொட்டைநூற்றன்னதானங் கொடுப்பாருண்டோ
தாலிவிற்றன்னதானங் கொடுப்பாருண்டோவுலகில்
சதாநித்தம்அன்னதானங் கொடுப்பாருண்டோ
கைலாசநாதர்பிச்சை கேழ்க்குமளவிலே
கண்டார்கள் திருமதுரை வீதியுள்ளோர்
பிள்ளைதின்னுமாண்டியிதோ வாரானென்பார்சிலபேர்
பிணந்தின்னும்பித்தனிவர் வாரானென்பார்
மைந்தன்தின்னும்ஆண்டியிதோ வாரானென்பார்சிலபேர்
மருளவன்பித்தனிவன் வாரானென்பார்
தன்பிள்ளைஅசல்பிள்ளை தரிப்பாராம்சிலபேர்
தலைவாசலக்கவையோடி அடைப்பாராம்
தங்கள்தங்கள்பிள்ளை தாங்கவெடுத்து
தலைக்கடையாலும்பிறைக்கடையாலும் மோடுவாராம்
இவர்கள்மனஞ்சோதிக்க ஈஸ்பரன்தான்கண்டு
என்னரூபங்கொண்டாரந்நேரம்
தலைக்கடையிலொரு ஆண்டியானார்
புறக்கடைக்கிங்கேயொரு ஆண்டியானார்
நானும்பிள்ளையெனக்கு ஆகாரந்தங்காலே
நான்போவனிவ்விடம்விட்டு தம்பிரானும்
தலைக்கடையிலொருவர்வந்து ஆரையாவென்றான்
தம்பிரான்பிள்ளைதின்ன வந்தேனென்றார்
பின்னுங்கதவடைத்து பேசாமலிவர்கள்
பிறைக்கடையிலொருவன்வந்து ஆரையாவென்றான்
பிள்ளைதின்னுமாண்டியிங்கே வந்தேனடாபத்தா
பேசாதேமூன்றுபிள்ளை வேணுமடா
பொல்லாதகாலங்கள் சொல்லாதேவந்ததென்று
பேசாதேகதவடைத்துத் தானிருக்கார்
பிள்ளைதின்னும்ஆண்டியென்றும் பிணந்தின்னும்
பித்தனென்றும்பேய்கள் பினத்ததேசுவாமிகண்டு
நெற்றிக்கண்ணைமேலகடைப்பார் ஐயனார்சுவாமி
நீராகப்போச்சுதாந் திருமதுரை
திருமதுரைவீதியெல்லாம நெருப்பாயெரிந்தது
திரும்பினார்சிறுத்தொண்டன் வீதியிலே
மஞ்சள்பிளந்துவாழை நாட்டுவாரும்சிலபேர்
மடந்தனில்வந்து தோரணங்கட்டுவாரும்
இஞ்சிபிளந்துவாழை நாட்டுவாருமசிலபேர்
எலுமிச்சந்தோரணங் கட்டுவாரும்

தண்ணீர்தெளித்து தரைகோலங்களிட்டு
சாம்பிராணிதூபங்கொண்டு வருவாராம்
அரசிலைதோரணங் கட்டுவாராஞ்சிலபேர்
ஐயர்க்குத்தூபங்கொண்டு போடுவாரும்
வெண்காட்டம்மன்வந்துபாதஞ்சொரியஅப்போது
சிறுத்தொண்டபத்தன்வந்துபாதஞ்சொரிய
மல்லிகைமுல்லைபிருவாட்சியுடனே
மலருங்கொழுந்துமாகசாற்றுவாரும்
கோங்குடமல்லிகைசாற்றுவாருமன்பன்
கொத்தோடேசெவ்வந்திப்பூஅணிகுவாராம்
பாதமலரர்ச்சித்து ஐயனைக்கூட்டியே
பதினெட்டாங்கட்டுக்குள்ளேயிட்டுவந்தார்
தங்கப்பொற்பலகையுந்தான்பவனித்தாள்
தள்ளிவிட்டார்சுவாமியுங்காலாலே
புலித்தோலாசனத்தைப்போட்டமர்ந்துசுவாமி
பொக்கணத்தைக்கழட்டிபக்கம்வைத்தார்
ஆசனத்தைப்போட்டுதானமர்ந்தார்சுவாமி
அண்டையிலேதிருவேடமாத்திரையும்
தலைவாழையிலைகொண்டுமூன்றிலைபோட்டு
தண்ணீர்தெளித்தெதிரேநில்லுமென்றார்
தெரியவுரைக்கிறேன்சிறுத்தொண்டபத்தாயெனக்கு
தேவியரிருவருண்டுபொல்லாதவர்
மூத்தபிள்ளையொருவன்பார்த்திருக்கும்வழியை
முன்னாலேவருகுமேயதாக்கிளையபிள்ளை
பொல்லாதபிள்ளையெனக்கொருவனுண்டு
போடடாஅதுக்கொருயிலையுமென்றார்
உன்பிள்ளையைக்கொன்றதொருதோஷந்தீர
சாத்திரியொருவன்வேணுமென்றார்
அதிதிக்கும்ஆயிரம்பேர்க்கன்னங்கொடுப்பேன்
அரிதாச்சுஇன்றைக்குஒருவனென்றார்
எங்கெங்குந்தேடிவந்தேன்சங்கமரைக்காணமல்
இருந்தீரொருவரிங்கேஈஸ்வரன்போலே
நானென்னபாவதோஷமசெய்தேனோசுவாமி
கங்கையென்னதோஷங்கள்செய்தானோதான்
சந்தனநங்கையென்னதுரோகஞ்செய்தாளோதான்
சந்தானமென்னதுரோகஞ்செய்தானோதான்
யாருமகப்படாமல்போனதினால்சுவாமி
ஆதரிக்கநீரொருவர்வந்ததினால்
உன்னைவிடவெனக்குவேறொருதெய்வ
முண்டோவெனக்குசுவாமிமண்டலத்தில்

ஆருமொருப்பண்டாரங்களகப்பட்டார்களேயென்றீர்
அமரடாரீயாகிலும்பக்கல்வந்து
தன்பிள்ளைக்கறியைத்தான்பொசிப்பானேவென்று
சுவாமியவன்மனதைசோதிக்கின்றார்
அப்படியானாலேபொசிக்கிறேனென்று
அமர்ந்தான்அய்யருடபக்கவிலே
ஐயருக்கோரிலைஅஞ்சிலையும்போட்டு
ஐயருடமுன்னாலேநங்கைசொல்வாள்
உண்ணவுண்ணபடைக்கட்டோபண்டாரமேசிவமே
ஒருமுட்டாய்கொண்டுவந்துபடைக்கட்டோ
ஒருக்காலேகொண்டுபடையாயோதாயேயெங்கள்
தம்பிராட்டியம்மனுக்கும்பூசையாக
தாங்கியெடுத்துவந்துபடையாயோதாயே
யெங்கள்தம்பிராட்டியம்மனுக்கும்பூசையாக
உண்டானசோறுவகைகறியத்தனையும்
ஒருமுட்டாகொண்டுவந்துபடையுமென்றார்
சமைத்தகறிவகைகளன்னமுர்தங்கொண்டு
தாங்காமல்கொண்டுவந்துபடைக்குகின்றார்
சிவிசுரண்டிஅம்மாள்பத்தொன்றுமில்லாமல்
சேரவேதான்படைத்தாளிலைதனிலே
இம்மட்டோதாயேபின்னுமுண்டோசொல்லும்
எங்கள்குலதேவதைக்குபூசையாக
பாண்டத்தில்சலம்விட்டுபத்தில்லாமற்கழுவி
பாத்திரத்தில்கொண்டுவந்துவாருமென்றார்
அப்படியேகொண்டுவந்துபடைத்தேன்காண்சுவாமி
அமுதுண்ணுந்தேவர்பசியாயிருக்கிறீர்
உன்னைநம்பலாமோடாசிறுத்தொண்டபத்தா
உன்பெண்சாதியைவெள்ளளவும்நம்பொணாது
ஒருபந்தியிலிருவஞ்சனைசெய்தாளடா
உற்றுப்பாரடாபத்தாஎன்னிலையை
தலைக்கறிகளெல்லாமுனக்குவைத்தாள்பத்தா
வாருமரம்புமாகயெனக்குவைத்தாள்
வேறுமவிரகுமாகயெனக்குவைத்தாள்பத்தா
மேதேகறிகளெல்லாமுனக்குவைத்தாள்
உற்றமனுஷொன்றுசொல்விஉன்பெண்சாதி
உள்ளகறிகளெல்லாமுனக்குவைத்தாள்
வஞ்சனைசூதுகள்பொய்களொருக்காலும்வாராது
மகதேவரோஅன்னங்கொள்ளுமென்றார்
மாமிஷமானதெல்லாமுனக்கேவைத்தாள்பத்தா
மட்டியெலும்பெல்லாம்யெனக்கேவைத்தாள்
இச்சையிருந்துதேயாமானால்தேவர்
இந்தயிலைசாதங்கூடஉண்ணுமென்றார்

உண்ணுமென்றுபசாரஞ்சொல்லாதேபத்தா
    உன்னிலைசாதங்கூடயெனக்குவையும்
அப்படியாகுதென்று அன்பனிலையையும்
    ஐயருடமுன்னாவிழுத்திவைத்தான்
கைகட்டிமுன்னாலேபோற்றிநின்றானன்பன்
    கண்டல்லோசங்கமருமனமகிழ்ந்தார்
பூசையில்தீபதூபமானதேயானால்
    பிள்ளைக்குலைபிர்ம்மஹத்திசுற்றுமென்றார்
தந்திரவார்த்தைசொல்லுதம்பிராமனுமப்போ
    தன்னுடஎதிரேவந்துநில்லுமென்றார்
இளப்பாயிருக்கிரீர்தம்பிரானேசிவனே
    இந்நேரந்தேவமுதுகொள்ளுமென்றார்
தாம்பூலம்தட்சணைகள் வையடாபத்தா
    சாம்பிராணிகற்பூரங்கள்கொண்டுவாவென்றார்
கண்டனடாபத்தாவுன்சூதுகளத்தனையும்
    கைகாட்டிபெந்தனுக்குமோசஞ்செய்தீர்
எங்களைசாக்கிட்டுஉன்மைந்தனைதின்ன
    யெத்தனைநாள்மதங்கள்செய்திருந்தீர்
எனக்கிச்சையிருந்துபிள்ளைக்கறிக்கிங்கேவந்தேன்
    இன்பமானகரியிங்கேகாணேனடா
தலைக்கறியில்லாதவீட்டில்சாதமுண்ணேனடா
    தவறாமல்நானெழுந்துபோறேனப்பா
ஆசனத்தோலைதானெடுப்பார்சுவாமி
    அவருடபாத்திரத்தைகையிலெடுப்பார்
கஞ்சாய்குடுக்கையும் மாத்திரக்கோலையும்
    கமண்டலத்தைஎடுத்துதூக்கிவைப்பார்
ஐயர்பிணக்குகளவர்பிரிவுங்கண்டு
    அந்நேரமதிருவெண்காட்டுநங்கையம்மன்
கையைநெரித்தாளம்மைகனகஞ்சொரிந்தாளாம்
    அம்மைகணவன்பின்னேவந்துஒளித்தாள்
தலையைபுதையெனவேதாதிகையில்தந்தோம்
    சமைத்துவைக்கச்சொன்னார்நாமறந்தோம்
புதைத்ததலைதனையெடுத்துசமைக்கவே
    போதல்லோசிலநேரம்செல்லுமேதான்
தம்பிரானென்னசாபந்தருவாரோயினி
    தப்பிதங்கள்நேர்ந்துதென்னசெய்வேனென்றாள்
அம்மனதுயரங்களைசந்தனநங்கை
    யறிந்தல்லோயெதிரேவந்துதெண்டனிட்டாள்
மனதில்விசனமென்னமாதாவேதாயே
    மகதேவனென்னசொன்னார்சொல்லுமம்மா
தலையைப்புதையெனவேஉன்கையில்தந்தேன்
    தலைக்கறிகேழ்க்கிறார்சங்கமரும்

சமைத்தேனம்மா தலை சமைத்தேனம்மா தாயே
    யெதக்கமறந்தேனம்மாயிந்தாவென்றான்
தலைக்கறிகொண்டுவந்தாள்சந்தணநங்கை
    யெடுத்துப்படைத்தாளிந்தவெண்காட்டாள்
தலைக்கறிபடைத்திட்டோம்தம்பிரானே உனக்கு
    சாதங்கறியமுது உண்ணுமென்றார்
இந்நேரமட்டுந்தேவரிளப்போடிருந்தீர்
    இப்போதுதேவரமுதுகொள்ளுமென்றார்
அறிந்தேதண்டா உங்களுடசிறுத்தொண்டபத்தரே
    ஆசாரஉபசாரமோசமெல்லாம்
உண்ணலாந்தலைக்கறிபின்னாலேயென்று
    ஒளித்துவைத்திருந்தீர்கள்ருசியறிந்து
தலைக்கரியானதேதம்பிரானுக்கற்புதம்
    தானறிந்தேயதையொளித்துவைத்தீர்
நான்கேட்டதினால்தலைக்கறிகள்படைத்தீர்கள்
    கேளாமற்போனால்மோசஞ்செய்வீர்கள்
அப்படிகுருதுரோகஞ்செய்வதுமில்லை
    தாதிபிசக்கதினால்வந்துதையா
மனமறிந்தேதுரோசஞ்செய்வதுமில்லை
    மகாதேவரோ அமுதுகொள்ளுமென்றார்
இன்னமொருவசனங்கேளடாபத்தா
    யிவ்விடத்தில்வந்துவெகுநேரமாச்சுது
எழுந்தபொழுதிலேஇங்கேவந்தேன்பத்தா
    விடிந்தபொழுதுமட்டாயிங்கிருந்தேன்
சித்தடிகள்நடமாடவில்லையோடாபத்தா
    சிறுபிள்ளைகுரலோசைகண்டதில்லை
தண்டைச்சதங்கைசத்தங்கேட்டதில்லைபத்தா
    தாலாட்டுஞ்சத்தங்களைக்கேட்டதில்லை
மலடனும்மலடியும்வாழ்கிறவீட்டில்
    வயிறுவளர்க்கக்சணக்கில்லையென்றார்
ஆண்மலடுபெண்மலடன்சஞ்சரிக்குமிடத்தில்
    அறியாதேயமுதுண்ணவந்தேனென்றார்
கேட்டாயோபெண்ணேநீவெண்காட்டுநங்கையே
    கிழவனார்சொல்லுகிறசேதிகளை
பிசைந்தகெஞ்சாவெறியால்பித்தனானையர்
    ஓடியேவிழுந்துண்ணவருவேனென்றார்
எங்களுக்கொருபிள்ளையிருக்குதுசுவாமி
    யென்னாவிதங்களைசெய்வதென்றார்
அருத்துக்கறிசமைக்கசொன்னாரோசுவாமி
    அப்படியேஅவருக்குசெய்துவைத்தோம்
பிள்ளையில்லாவீட்டில்கொள்ளேனென்றாலன்னம்
    பெண்ணேகனமோசங்களென்னசொல்வோம்

இல்லாதேபிள்ளையிப்போசொல்லாலேவருமேயினி
யென்னசொல்லப்போறோம்பெண்ணேஎன்றார்
சொன்னசொல்மரதியாய்ப்பேசுறார்சுவாமி
சொக்குபொடிமயக்கங்கொண்டவர்போல்
பொய்யாகிலுமிவர்க்குசொன்னோமேயாகில்
போசனங்கொள்வாரிந்தசங்கமரும்
மலடனுமல்லகாணிவ்வடியாள்சிவனே
மலடியுமல்லகாணிவ்வடியாள்
எங்கள்குடிக்கொரு பிள்ளையுமுண்டுசிவனே
தூரத்துக்கு தூரம்வழியவன்போனான்
உமமிடதுடர்ந்தபசிக்குவந்துதவமாட்டான்
காதத்துக்காதவழியவனபோனான்சிவனே
உம்மிடகடந்தபசிக்குவந்துதவமாட்டான்
மாமியார்வீட்டுக்குமருவுண்ணப்போனான்
வருகவென்றால்வெகுநேரஞ்செல்லும்
இந்நேரவேளைக்குவந்ததும்வாராது
இப்போதுதேவரமுதுகொள்ளுமென்றார்
காதத்துக்காதவழிபோனாலும்பத்தா
கடும்பசிக்குவந்துதவமாட்டான்
தூரத்துக்குதூரவழிபோனாலும்பத்தா
என்னுடையஉகந்தபசிக்குவந்துதவவேணும்
அழைக்கவுஞ்சொன்னதொருமாய்கையானபடிசிவனே
அழைக்கவுஞ்சொல்லுகிறானென்னசெய்வோம்
இனியென்னசெய்வோமென்றுஇருவருமபேசி
யிருக்கின்றசைகைக்ளைத்தானறிந்தார்
வெள்ளிப்பிறம்புதந்தார்செம்பில்சலந்தந்தார்
வெண்காட்டுநங்கையுடகைகொடுத்தார்
வாடிமகளாரேவெண்காட்டுநங்கை
மகதியானவாசலிலேநின்றுகொண்டு
மத்தியானவாசலிலேமுத்துவாசலில்நின்று
மகனேமகனேயென்று அழைமகனே
கொம்பில்சலந்தன்னைபூமியில்தெளித்து
திருக்கைபிரம்பதினால்தட்டியல்லோ
அழையம்மாவெண்காட்டுநங்கைநீயென்றுசொல்ல
அன்னேரம்சுவாமிசொல்லைத்தான்கேட்டு
அவர்க்குக்குற்றங்கள்பெண்ணேவாராமல்போய்நின்று
கூப்பிடுமென்றல்லோஅன்பன்சொன்னான்
அய்யர்சொல்தட்டாமல்வெண்காட்டுநங்கை
அந்நேரந்தெருவாசல்வந்துநின்று
ஒப்புக்குத்திருவெண்காட்டுநங்கையும்போய்நின்று
உயர்ந்தகுரலாகத்தானழைப்பாள்

## சீராளன்வருகிறது.

நான்பெற்றமகனோவாராரோதம்பி
    நல்லறிவுசீராளாவாராயோடா
பள்ளிக்குப்பள்ளனோவாராரோதம்பி
    பாலகன்சீராளதேவாவாராயோடா
ஓங்கியகுரலாகத்தானழைப்பாளம்மாள்
    ஓடிவருகுதுபிள்ளைவீதியிலே
நீண்டதெருவிலேநெடுந்தெருக்கோடியிலே
    நிலையுள்ளஅன்பன்மகன்வருகிறான்
நெடியபுத்தகத்தைக்கையில்பிடித்து
    நெடுந்தெருக்கோடிவழிஎழுந்துவாரான்
தண்டைச்சிலம்புகாலிலசதங்கைகுலுங்கவே
    நம்பிசீராளன்தெருவில்எழுந்துவாறான்
அணைத்தபலகாயங்கள்மேலேமணக்கவே
    அன்பன்மகனிங்கேயெழுந்துவாறான்
அறுத்தபிள்ளைவரவேசுவாமியதுவறிந்து
    அவர்கள்மனைதயங்கேசோதிக்கிறார்
வந்தொருபிள்ளையைமருங்கழைப்பாளோவென்று
    தம்பிரானும்கைலாசம்போயொளித்தார்
தம்பிரானேகாணோமென்றுசொன்னசொல்கேட்டு
    தட்டிவிட்டாள்பிள்ளைகைத்தலத்தால்
வந்ததொருபிள்ளையைபுரங்கைபாலடித்தல்லோ
    தேவனைநினைத்துதானழுவாள்
வெண்காட்டுநங்கையம்மாள்அழுகிறசத்தம்
    உமையவள்பார்வதிக்குங்கேட்டிடுமாம்
சந்தனநங்கையாளழுகிறசத்தம்
    அறுபத்தொருகோடிமுடியதிர்ந்திடுமாம்
சிறுத்தொண்டபத்தனழுகிறசத்தம்
    சிவனார்திருச்செவியிலடிபடுதாம்
சீராளதேவனழுகிறசத்தம்
    கந்தன்கணபதிக்குங்கேட்டிடுமாம்
தான்பெற்றபிள்ளைதன்னைதாயுந்தகப்பனும்
    தப்பாமலேயிவர்களடிக்கலுற்றார்
நீவந்தல்லோசுவாமியில்லாமற்போனார்
    நிஷ்டூரபாசாயிங்கேநீயேன்வந்தாய்
இவர்கள்புலம்புகிறசத்தந்தன்னைக்கேட்டு
    ஈஸ்பரியென்னசொல்வாள்சுவாமியுடன்
அன்னக்கொடிவிருந்தைஅருப்பேனென்றாய்சுவாமி
    அவனுடன்அன்புபத்திசோதியென்றோம்
ஆருமகப்படாமல்நீயேயொருவராய்
    அவனுடமடத்துக்குநீர்போயி

வழங்கும்கறிவகைகள்வேண்டாமென்றுசொல்லி
வழங்காக்கறிவகைநீர்கேட்டீர்
பிள்ளைக்கறியுஞ்சோறும்போட்டாயேயானால்
போசனங்கொள்வோமென்றீர் அவன் மனையில்
பிள்ளையறுத்துகறிசமைக்குதுஉனக்கு
போசனந்தந்தவர்க்குமோசம்பண்ணி
சிந்தைகலங்கிஅவர்தேடிப்புலம்ப
சிவனாரேஉந்தனைத்தான்காணாமல்
அவர்கள்புலம்புகிறசத்தங்களிங்கே
அறுபத்துநாலுகோடிமுடி அதிர்ந்திடுமாம்
வெள்ளைவிடையிலேசிறுத்தொண்டர்பக்கல்
விமலரேகாட்சிதரவாருமென்றாள்
பிள்ளையறுத்துண்ணவரப்பேனேனடிபெண்ணே
பொய்யன்மெய்யனேவென்றறியப்போனேன்
சொன்னசொல்தவறாண்டிசிறுத்தொண்டபத்தனே
சோதித்தேனென்னாலேயானமட்டும்
அறுத்தபிள்ளையெழுப்புஅவன்வீட்டில்விட்டேன்
ஆருமறியாமலேவந்துவிட்டேன்
அவனுக்குமோட்சங்கொடுக்கவேவேணும்
ஆதியுமையவளேயெழுந்திரென்றார்
வெள்ளைவிடையின்மீதில்விமலருமேறினார்
வீற்றிருந்தாளுமையவளும்பக்கலிலே
மூஷிகவாகனமேறினார்விநாயகர்
முருகர்மயில்வாகனமேறுகிறார்
அன்னவாகனமேறிபிர்மாவும்வாரார்
அம்மன்சிம்பவாகனமேறினாளே
மாயன்கெருடனேறிவருகிறாரங்கே
வானுநடனிந்திரன்வருகிறார்
ஆளிவாகனமேறிஅழல்வீரபத்திரர்
அவரொருபுரமாகவருகிறார்
முப்பத்துமுக்கோடிதேவருடனே
முனிவர்ரிஷிகளுடன்வருகிறார்
நாற்பதெண்ணாயிரம்ரிஷிகளொருபுரம்
நாகலோகத்தாரொருபுறம்வருக
கின்னரர்கிம்புருடர்சித்தர்வித்தியாதரர்
கெருடகாந்தருவரும்வருகிறார்
ஆதிசிவனுடனேஅனைவருஞ்சூழ்ந்து
அரகராசத்தஞ்செயதுவருகிறார்
சங்கநாதத்தொனிகள்செயகண்டிவாத்தியம்
சத்தசமுத்திரம்போல்கோஷ்டமிட
ஆகாசவீதியிலேஆதிசிவனுடன்
அனைவருங்கூடியங்கேவந்துநின்றார்

வெள்ளைவிடையைவிட்டுவிமலரிறங்கி
வேறொருசங்கமனைப்போலானார்
அழுகிறசிறுத்தொண்டன்பக்கலுக்குவந்து
ஆடாசிறுத்தொண்டபத்தாவென்றார்
உம்மைப்போலேஒருசங்கமனார்வந்தார்
உறுதியாய்போசனந்தருவேனென்றேன்
பிள்ளைக்கறியுஞ்சாதந்தின்னவேயிங்கே
பொருந்திவந்தாரிங்கேவிரும்பவில்லை
அறுக்கபிள்ளையெழுந்துவந்ததுசுவாமி
அவர்வந்திருந்தஇடம்தனமாச்சு
ஈஸ்வரர்வந்தாரென்றுதெரியாமல்போச்சுது
ஏமாந்திருந்தோமடாவெளியானார்
மோசங்கள்செய்துமகதேவரெங்களை
மோட்சங்கொடுக்காமலேஅவர்போனார்
காண்போமேயானால்நாங்கள்கொண்டபலந்தீர்வோம்
காணாமல்போனாலேஉயிர்விடுவோம்
நாங்கள்தாண்டாசிறுத்தொண்டபத்தாவுன்னிடத்தில்
நாதனும்சோதிக்கவந்தேனென்றார்
மண்ணிலுலகத்திலேவாழ்கிறையோபத்தா
பொன்னுலகத்திற்குவாராயோடாபத்தா
மண்ணிலுலகத்திலேவாழ்ந்தாச்சுசிவனே
பொன்னுலகத்திற்குவாரோமென்றார்
பொன்னுலகத்திற்குவாரதேயுண்டானால்
எறும்பிள்ளாயிந்திரகமேறு
நானொருவனுமாகவருவேனோசுவாமி
நானொருவார்த்தைசொல்லுகிறேன்கேள்
உப்பிடுந்துணைவேணுந்தம்பிரானேசிவனேயெனக்கு
உதவிற்துணைநல்வேணுந்தம்பிரானே
நெருப்பிடுந்துணைவேணுந்தம்பிரானே
நீரிடுந்துணைவேணுந்தம்பிரானே
அந்தண்டையேழுபிந்தண்டையேழு
எழுபேழும்பதினாலாக யிடங்குமென்றார்
உன்னோடேபதினைக்குவீட்டோடேகயிலாயம்
உன்புறம்வருவேனென்றாய்
தன்னோடேசெய்தபாவந்தன்னோடேயல்லாமல்
பின்னமொருவழிக்குவுதவியுண்டோ
உந்தனைவாருமென்றால்சிறுத்தொண்டபத்தா
ஊரெல்லாம்கூட்டுறாயென்றாக
நான்செய்ததவங்களிலேபந்திபகுந்திட்டு
நாதரோமோட்சந்தரவேணுமையா
மூவஞ்சுபதினஞ்சிவீட்டுக்காரருக்கும்
மோட்சங்கொடுக்கவேணுஞ்சுவாமியென்றார்

பார்த்தியோபெண்ணே உமையேபார்வதியாளே
பாலகன்சொன்ன வார்த்தைகளை
அன்பன்சொல்தட்டாதே ஆதிசிவனுமே
அறுபத்தொறுகோடி முடியிடங்குமென்றாள்
ஏறும்பிள்ளாயிந்திர ரதமேறும்பத்தா
யேழுமேழும்பதிலாக வந்தமரும்
சிறுத்தொண்டன்விட்டோட் பதினைந்துவிட்டுக்காரர்
தெய்வபுரக்கூட்டி தான்வாரார்
ஆகாசகெந்திருவர் புட்பமதனைக்கொண்டு
அடர்ந்தயிருபுறமும் மழைபொழிய
ரம்பையூரவசியாள் மேனகைதிலோர்த்தமை
நடனங்களாடியே நூண்மேனவர
அடுத்தான்கயிலாச முகசாலைவாசல்
அறிந்தாரேக்ணபதி யெண்ணமிட்டார்
வெண்சாதிசம்மதிக்க சொன்னசொலலெல்லாம்
பொய்பாகப்போச்சுதென்றுசொலவார்
ஆரடாதெய்வபுரம் வாறுவதென்று
அதட்டினார்வேழமுகமுடைபோனும்
சனியன்மகுத்துவத்தால் சிறுத்தொண்டபத்தன்
தானென்றவாணுமா பேதுசொலவான
பிள்ளைபறுத்துக்கறி சங்கமருக்கிட்டு
பேறுபெற்றிக்கே வாரேன்தெய்வபுரம்
ஆரடாஇங்கேவந்து தட்டுறவனென்றார்
அறிந்தாரோஆதிசிவனாரும்
பிள்ளையறுத்திட்ட பெருமைகள்சொன்னாய்
பொறுடாசிறுத்தொண்டாகில்லுமென்றார
தேனையுமிறுத்துமென்பார் சுவாமிபந்நேரம்
சிந்தைகலக்கியம்மன் திகைத்துநின்றார்
வரமபெற்றவெண்காட்டு நங்கையுமன்னேரம்
வந்தாளேதேரைவிட்டு தானிறங்கி
மனனவனார்சொனனபிழை பொறுத்துசுவாமி
மங்கிலியபிச்சை தாருமென்றாள்
அன்பனார்செய்தபிழை தேவர்பொறுத்து
அருபத்தொருகோடி முடியிடங்குமென்றாள்
ஆதியிலேஉனக்கு வாக்குக்கொடுத்தேன்
அழிப்பதுமொறுக்காலு மில்லையம்மா
தெய்வபுரத்தைவிட்டு திரும்பென்றுசொன்னேன்
திருவாக்குதவற வொண்ணாதுகண்டாய்
புத்தியில்லாமனுஷன் சிறுத்தொண்டபத்தனே

பூலோகந்தந்துனக்கே கொண்டுபோவி
அவனைப்போலபத்தனனேகம் அவனியில்
கொண்டுபோயறியவே தெரியவைத்து
தெரியப்படுத்தியல்லோ சிறித்தொண்டபத்தனை
தெய்வபுரமிங்கே கூட்டிவாரேன்
மறுபடியும் சிறுத்தொண்டன் பூலோகம்வருகிறது.
இங்கேயிரும்வெண்காட்டு நங்கையம்மாவென்று
யிறங்கினாரிருவரும் பூலோகம்
பூலோகம்வந்திறங்கி யிருவருமாக
போரார்கள்காரைக் காட்டம்மையண்டை
ஆதியில்வேளாளர் குலத்திற்பிறந்து
ஐந்துபிராயத்தில் விவாகஞ்செய்து
தவஞ்செயதொரு பிள்ளையைப்பெற்றபலன்
பின்பல்லோதனனுட கணவனாரிறந்ததால்
ஒருவர்பொருளெனக்கு வேண்டாமண்டோதறி
ஒருபிள்ளையுடனூறில வாழ்த்திருந்தால்
கூலிகருந்தியல்லோ கரைகட்டம்மை
கொண்டுவந்து ஒருக்காலேசேர்க்கிறது
அகத்திலொருவருக்கன்னங்கொடுப்பாள்
அதிதிபரதேசிக ளானவர்க்கு
தவிடுநொய்யுமாகவே களிபாகிளறி
தன்பிள்ளையுந்தானுமாய்க் கொள்ளுறதும்
அமுதுபடியெடுத்து கறிகள்சமைத்து
அகத்திற்கொருவர்க்கன்னந்தான்கொடுப்பாள்
இப்படியிருக்கிற நாளையிலீஸ்பர
இவள்மனதைசோதிக்கவருகிறார்
சிறுத்தொண்டனையழைத்து தெய்வபுரம்விட்டு
திரும்பினார்பூலோகந் தன்னிலேதான்
தம்பிரான்போலயல்லோ சுவாமிவடிவானார்
சுப்புபிள்ளையுமானனன்பனவன்
காரைக்காட்டம்மைபதி தேடிவந்தாரிருவர்
காலிகள்மேய்ப்பான வள்புத்திரனும்
ஊரார்காலிகள்மேய்த்து அவளுடபிள்ளை
ஒருவனுமேதனித்துபோயிருப்பான்
அந்தவேளையில்சுவாமி சங்கமனைப்போல்வந்து
அடித்தாரேஜெயகண்டி வாத்தியத்தை
சங்குநாதத்தொனிகள் சத்தங்கள்செய்து
தலைவாசலிருவரும் வந்துநின்றார்
கேட்டாளேகாரைக் காட்டம்மையுமந்நேரம்
செண்டிகையில்சலமும் புஷ்பமுங்கொண்டுவந்து

பாதந்துலக்கி அம்மாள் பட்டால்துடைத்து
பத்திரபுஷ்பங்கள்கொண்டு அர்ச்சனைசெய்தாள்
கைகட்டிவாய்புதைத்து காரைக்காட்டம்மை
கர்த்தரைப்பார்த்துவொரு வசனஞ்சொல்வாள்
யெங்கெங்கும்நீயாகிதன் இனவர்யோற்றி
யேழையைக்காக்கவந்த தாள்போற்றி
திங்களணிந்தமுடி கெங்கையைத்தரித்த
செம்சனம்பலவரோ போற்றிஐயா
அடியேன்மடத்தில் தேவரமுதுக்குமில்லும்
அதிதிக்குஒருவிரதஞ் சுவாமியென்றார்
பனிரண்டுமணிநேர மிங்கேவந்து
பசியாறிப்போங்களிருவர் சுவாமியென்றார்
அப்படியேசல்லதம்மா அமுதுக்குவாறேன்
அடுத்ததெருவிலொருவனமுதுசொன்னான்
அங்கையும்போய் பார்த்துவாரேன்தாயே
அரைநாழிகை செல்லுமென்றார்
அமுதிக்குசம்மதித்து அம்பலவாணர்
அவளுடபிள்ளைபக்கல் தேடிபோனார்
மாடுகண்மேய்த்தல்லோ மரத்துநிழலில்
மந்தையடக்கிய வணங்கிருப்பான்
ஐந்துபிராயப்பிள்ளை அரியாக்குழந்தை
அவனிடபக்கலுக்கு ஓடிவந்தார்
ஆடாதம்பியுந்தன் தாயாழைக்கிறாள்
அமுதுபொசிக்கவுன்னை கூப்பிடுகிறாள்
ஆனால்கேள்தம்பிரானே அசலார்கள்மாடல்லோ
அடுத்தவயலில்போறில் போய்விழுந்தால்
தெண்டம்பிடுத்திடுவார் திவாணத்தார்கள்
திருக்கையில்கோதண்டம் போட்டடிப்பார்
எப்படிக்கியான்போறே னென்றானேபிள்ளை
யேதுசொல்வா ராதிசிவனாரும்
நீபோய்வருமளவு மாடுகளைமேய்த்து
காவலாயிருக்கிறேன் தம்பியென்றார்
அமுதுவைத்துக்கொண்டல்லவோ அழைக்கிறாள்தாயார்
அரைநாழிக்குள்ளாகத் தான்வாருமென்றார்
நான்போய்வருமளவு மிங்கேயிருமென்று
நடந்தானேயறியாத பிள்ளையுந்தான்
இவனங்கேபோகுமுன்னே காரைக்காட்டம்மை
யிருநாழியமுதுகொண்டு தான்சமைத்து
காரைக்கீரையும் தவிடும்களியாகக்கிளறி
கர்த்தருக்கற்புதமா யிறக்கிவைத்தாள்

சாத்தமுதுக்குவைய லரைத்துவைத்து அம்மன்
தண்ணீர்குடமெடுத்து புறக்கடைக்கு
தாம்புக்கயிறுமந்தத் தோண்டி யுமெடுத்துத்
தண்ணீரெடுக்கக் கிணறருகில்வந்தாள்
அந்தவேளையில் சுவாமியனுப்ப
அவனிடமாளிகையை யோடிவந்தான்
சாதம்வடித்துக்கொட்டி ஆறவைத்திருக்கும்
தவிடுங்களியுந்தின்ன பிள்ளையல்லோ
கண்டவுடனேபிள்ளை கலத்தையெடுத்தல்லோ
கையினால்சாதங் கொஞ்சம்அள்ளிவைத்து
ஆவலுடன்கீரையுஞ் சாதமும்பிசைந்து
அள்ளிஉண்ணையில தாயார்வந்துவிட்டாள்
தண்ணிக்குப்போன தாயாரந்நேரம்வந்து
தன்னிடபிள்ளை தன்னைக் கண்ணில்கண்டாள்
கண்கள்பொறிபறக்க கடுங்கோபமாகி
கையாலுலக்கையைத் தூக்கிவந்து
சங்கமருக்கனமல்லோ சமையல்செய்துவைக்க
சட்டியிலநாய்வந்து வாயைவைத்து
எந்தன்தவத்திற்கு இடர்வந்ததென்றல்லோ
யிருக்கையாலுலக்கையைதான்சுழற்றி
அடித்தாளேபிள்ளையுட மூளைசிதற
ஆயிறஞ்சுககலாய்த்தானே யிறக்க
கண்ணுலுங்காதாலுங் வாயாலுஞ்சிவன்
கதறியுயிர்தானிங்கேபோகையிலே
அறிந்தாரேயந்நேரம் ஆதிசிவனாரும்
ஆகாஷம்பேமுழினை வாருமென்றார்
செந்தாமரைச்சிவிகில் வதனங்கள்செய்து
சிறுத்தொண்டனையழைத்து சுவாமியாரும்
மர்நைக்குக்காவல்சில தூதரைவைத்து
வருகிறார்சுவாமியவ ரன்னேரம்

மறுபடியும் சுவாமிவருகிறது

தெருவாசல்நின்று இருவருமாக
செயகண்டிவாத்தியத்தை தானடித்தார்
அசகாசத்தஞ்செய்து ஆதிசிவனாரும்
அன்னங்கொடுமம்மா வென்றேவருவார்
பசிவேளைக்குத்தந்தால் அம்பலவாணர்
பரகதிதந்துனக்கே வரமளிப்பார்
அறிந்தாளேகாரைக் காட்டடிமையுமன்னேரம்
ஐபரறிந்தால்மூது கொள்ளேனென்டார்
எடுத்துப்புதைத்து ஸ்நானஞ்செய்யவேணுமென்றாள்

இதோவந்தார்சுவாமியா ரென்றுசொல்லி
ஐயர்போசனஞ்செய்து போனபிற்பாடு
ஆருமறியாமல் நாம்புதைக்கவேணும்
பாயிற்சுருட்டியல்லோ வாரியெடுத்து
பாணையிலொளித்துவைத்து ஓடிவந்தாள்
ஐயர்க்குப்பாதபூசை செய்துமலரர்ச்சித்து
அவளிடமாளிகைக்கு கூட்டிவந்தாள்
இந்நேரம்தேவரீர் ரிளைப்போடிருந்துவிட்டீர்
இப்போதுபோசனங்கள் கொள்ளுமென்றாள்

போசனம் பரிமாறுகிறது.

வட்டமணைகொண்டு பாவித்திருவருக்கும்
வாழையிலையெடுத்துத் தான்போட்டாள்
தண்ணீர்தெளிததல்லோ அன்னங்கள்பாவித்து
தவிட்டுச்சிறைதுவையல் தான்படைத்தாள்
தாம்பூலந்தீபதூபந் தட்சணையும்வைத்து
தண்ணீருங்கொண்டுகையில் கொண்டுவந்தார்
பசித்தவேளைக்கமுது யென்கையினாலானது
பசியாறிப்போங்களிருவர் சுவாமியென்றாள்
கைகட்டிவாய்புதைத்து முன்னாலேநின்றாள்
கர்த்தரேதேவரமுது கொள்ளுமென்றாள்
போசனங்கொள்ளுமென்ற தொனதாயேகேளும்
பிள்ளையில்லாதவீட்டி லுண்ணேனென்றார்
அழும்பிள்ளைக்குரலோசை கேட்டதில்லையம்மா
அப்பாமகனேயென்ற சொல்லுமில்லை
மலடியாய்க்காணவில்லையென் தாயேநீதான்
மைந்தனையீன்றவள்போல காணுதம்மா
பிள்ளையிருந்தாக்கா லென்தாயேநீதான்
போசனங்கொள்ளுதற்கு அழையுமென்றார்
ஆனாலுரைக்கிறேன் தம்பிரானேசிவனே
அடியேனுக்கொருபிள்ளை யுண்டுகாண்பார்
எந்தன்புருஷனிறந்த பிற்பாடுபிள்ளை
யிருந்ததைந்துபிராயமட்டும்
கொண்டதவங்கள் பாதிகுறையாகப்போச்சு
கொள்ளுங்களமுது சுவாமியென்றார்
எந்தனுக்கொருபிள்ளையுண்டு காண்தேவர்
பிறந்துமடிந்துசெயல புறம்போனான்

இறந்துமடிந்து தெய்வபுரம்போனபிள்ளை
இப்போதுதேவர்க் குதவுமோதான்
அதனாலேகுற்றமில்லை தம்பிரானேசிவனே
அடியேன்மலடியல்ல் வமுதுகொள்ளும்
மாண்டுமடிந்தால் வைகுந்தஞ்சேர்ந்தாலுஞ்
வருந்தியபசிக்கு வந்துதவவேண்டும்
செத்துமடிந்தாலும் சிவபுரஞ்சேர்ந்தாலும்
சிறுபிள்ளைபசிக்கு வந்துதவவேண்டும்
பிள்ளையில்லாவீட்டில் போசனஞ்செய்யேன்
பொற்கொடியேநானெழுந்து போறேனம்மா
கெஞ்சாகுடுக்கையுங் கையில்மாத்திரைக்கோலும்
கமண்டலம்ஆசனத்தைத் தானெடுப்பார்
போசனங்கொள்வதில்லை போறேனம்மாவென்று
புலித்தோலாசனத்தைத் தானெடுப்பார்
ஐயர்பிணக்குகளை மெய்யாளறிந்தல்லோ
அரகராநாமிதற் கென்னசெய்வோம்
பிசைந்தகெஞ்சாமனத்துக் கிசைந்தபடியாகவே
பேசுமனங் கெதண்டபடியாக
மாண்டுமடிந்தபிள்ளை வரவேணுமென்றால்
மண்டலத்திலில்லாதவார்த்தைசொன்னார்
செத்துமடிந்தபிள்ளை திரும்பிவரவென்றால்
தேசத்திலில்லாத வார்த்தைசொன்னார்
ஆனாலுரைக்கிறேன் தம்பிரானேசிவனே
அடியேன்வளர்த்ததொரு நாயுமுண்டு
ஓசந்திபரவனென்று உந்திபிலென்றாலும்
ஓடிவந்துவாயை வைத்ததுகாண்
கூலிக்குத்தின வுலக்கையினாலே
கொண்டது கொண்டபடியாயடித்தேன்
கையாலடித்துமெள்ளக் காலைப்பற்றியிழுத்து
கண்காணப்பிணமாகத் தானெறிந்தேன்
அந்தப்படியேவும்மை நானடிப்பேனென்று
அவள்கையுலக்கைதன்னைத் தானெடுத்தாள்
அன்னங்கொண்டால்தேவ ராச்சுதுசுவாமீ
அகடுசெய்தாலுலக்கையா லடிப்பேன்
இல்லாதபிள்ளையிப்போ யெங்கேயிருந்துவரும்
என்னையனேயெங்களிட் குலதெய்வமே

கையாலுலக்கைகொண்டு காலாக்காட்டாள்கிறக்க
கண்டல்லோசுவாமியுமே சிரித்தார்
அறிந்தாயேசிறுத்தொண்ட பத்தாவுன்மனதில்
அறுத்தேன்பிள்ளையையென்று பெருமைசொன்னாய்
உனக்காகிலுமொரு பிள்ளையிருந்தாலுன்
தேவியிருக்கப்பிள்ளையுண்டேகண்டாய
அவளுக்குமணக்கோல மில்லையடாபத்தா
ஆனாலும்புருஷனில்லா விதவையல்லோ
இறந்தாலொருபிள்ளை யிருந்தாலொருபிள்ளை
யிதைவிடவேறேகதி யில்லையோடா
ா ளையயடித்ததொரு கடிபாலேயிங்கே
நாமும்அடிபட வந்தோமடா
இவளைப்போலதவ முள்ளவளேபத்தா
யீரேழுலகந்தேடக் கிட்டாது
பிள்ளையறுத்துக்கறி சமைத்திட்டேனென்று
பெருமையாய்ச்சொல்லவந்தாய் தெய்வபுரம்
உன்னிலுமிகுத்ததோ ருறுதிபடைத்தவர்
உலகத்தில்மேலான பேர்களுண்டு
இன்னுமிவள்மனதை சோதிப்போமென்று
யேதுசொல்வாரவள்முகம்நோக்கி
அன்னமேதாயேநான் சொன்னசொல்தட்டாதே
ஆதிசிவத்துக்கொப்பாய்ச் சொல்லுகிறேன்
மகனேமகனேயென்று மூன்றுசொல்கூப்பிடும்
மாதாவேபோசனம்நான் கொள்வேனென்றார்
ஐயர்சொலதட்டாமல் நானுமழைக்கிறேன்
பிள்ளையைத்தப்பாமலி விப்பொழுது
அப்பாமகனே பரந்தாமாவென்றுபிள்ளை
அழைக்கிறாளதிகுரலோசையாய்
பாயில்சுருட்டியல்லோ பரணையின்மேல்வைத்த
பிள்ளைதான்பதைத்துவுயிர் வந்திடுமாம்
செந்தாமரைச்சிமிளிலிருந்த வுயிரப்போது
பிள்ளையுடலில சுவாமிதான்விடுத்தார்
உயிரைவிடுத்தளவில் உருண்டுதிரண்டுபிள்ளை
உம்பர்பிரான்முன்னேவந்து தான்பணிந்தான்
அப்போதுஉம்பர்பிரா னென்றுமிகக்களித்து
மாதாவைத்தாமழைத்து யேதுசொல்வார்
எந்தனுக்காகவுன் மைந்தன் தலையுடைத்தாய்
இப்போதுகையிலாயம் வாங்களென்றார்

அந்தவசனங்கேட்டு காரைக்காட்டம்மாளும்
அதிகமகிழ்ந்துதானு மேதுரைப்பாள்
அப்படியேநானுமுன் சொற்படியாகவே
நாதருடனேசபைக்கு வாரோமென்றாள்
வாருமென்றுசொல்லி விமலருமப்போது
வானபுஷ்பவிமானத்தி லெழுந்தருளி
சிறுத்தொண்டபத்தனும் காரைக்காட்டம்மனும்
சிறுவனுமாகவே போய்மறைந்தார்
தம்பிரானப்போது சிறுத்தொண்டனைப்பார்த்து
தயவாகமுகம்நோக்கி யேதுசொல்வார்
உன்மைந்தனைக்கொன்று யெனக்குவிருந்துசமைத்தாய்
மகாபெரியதவமென்று தானுரைத்தாய்
காரைக்காட்டம்மைசேதி கண்டாயோபத்தா
கனிவுடனேஅன்பாயின்ன மெத்தவுண்டு
என்றுசொல்லிதம்பிரான் இத்தாதிபேருக்கும்
இந்திரனார்லோக பதவிதன்னை
சிறுத்தொண்டபத்தனால் பூலோகத்தில்சிலபேர்
சேர்ந்தார்கள் சிவனதுபதவியிலே
இந்தக்கதைதன்னை படித்தவர்கள்யாவரும்
இந்திரன்பதவிதனை யடைந்திடுவார்
சிறுத்தொண்டபத்தன்கதை சிறப்பாகக்கேட்போர்கள்
சீராகப்படிப்போர்கள் தான்வாழி
மண்டலத்திலசிறுத் தொண்டன்கதைதனை
அச்சிலிட்டோர்மாறுமல் சிவன்பதம்பெற்றுவாழ்வார்
சீராளதேவன்கதை சிறப்பாகப்படிப்போர்கள்
செகதலத்திலென்னாளு மிகவாழி
திருவெண்காட்டுநங்கை சந்தனநங்கைகதை
தான்படித்தோர் பூவுலகில்மிகவாழ்வார்
வாழிவாழியிந்த மண்டலந்தனிலுள்ள
தேவர்களுமானிடருந் தான்வாழி.

சிறுத்தொண்டபத்தன்கதை

முற்றிற்று.